Registered No. M. 5068.

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை, கும்பகோணம்.

வருட சந்தா 6—0—0] ஆசிரியர்கள்:- ஹகீம் சகோதரர்கள். [தனிப் பிரதி 0—2—0

மலர் 1 { சர்வதாரிஹூ கார்த்திகைமீ 14உ 29—11—1948 ஹிஜ்ரி 1368 மொஹரம்மீ 27உ திங்கட்கிழமை } இதழ் 41.

## வாலிபர்களை கோழைகளாக்கும் சேவக் சங்கம்

—( ஸ்ரீ கோவிந்த சஹாய் )—

ஜான்ஸி, நவ. 10.

ஐக்கிய மாகாண பிரதமரின் பார்லிமெண்டரி செக்ரடரியான ஸ்ரீ கோவிந்த சஹாய் இங்கு நடந்த பொதுக் கூட்டமொன்றில் கீழ்வருமாறு பேசினார்:— முஸ்லிம்லீக் மேற்கொண்டிருந்த அதே நோக்கங்களையும், முறைகளையும் மேற்கொண்டிருக்கும் ஹிந்து வகுப்புவாதிகள் சரியான அர்த்தத்தில் ஐந்தாம்படைக்காரர்களாவர். அரசாங்கம் அவர்களுக்கு எதிராக அவசியமான நடவடிக்கை யெடுக்கும். அவர்கள் பொதுஜனங்களின் ஒழுக்கத்தைக் கெடுக்கின்றனர். பாகிஸ்தான் முதலிய இதரநாடுகளின் பலத்தைக் காட்டி வாலிபர்களின் உள்ளத்தில் பயத்தை உண்டாக்கி சமூகத்தையே கோழையாக்க முயற்சிக்கின்றனர். இந்தியா நிர்க்கதியான சக்தியற்ற மக்களின் நாடு என்று சொல்லுகின்றனர். நாட்டின் சுதந்திரத்தையும் ஐக்கியத்தையும் பிரதானமாகக் கருதும் எந்த ஒரு அரசாங்கமும் இப்படிப்பட்டவர்களின் நடவடிக்கைகளை சகித்துக்கொண்டிருக்க முடியாது. ஒழுக்க நிலையைப் பறிகொடுத்த பிறகு ஒரு சமூகம் எல்லாவற்றையுமே இழந்துவிடும். முதல்தரமான ராணுவம் இருந்தும் பிரான்ஸ்வீழ்ச்சியடைந்தது. ஆனால் ராணுவ பலம் குறைவாக இருந்த போதிலும் ஒழுக்கம், உறுதியின் காரணமாக இங்கிலாந்து வெற்றியடைந்திருக்கிறது. பாகிஸ்தான் மீது குற்றம்சாட்டி முஸ்லிம்களை ஐந்தாம் படையினரென்று சொல்லுவதன் மூலம் ஹிந்து வகுப்புவாதிகள் அவர்களுக்கே ஒத்தாசை செய்கின்றனர். ஹிந்து வகுப்பு வாதிகளும் முஸ்லிம் வகுப்புவாதிகளும் நோக்கங்கள் பொறுத்தவரையில் ஒன்றுதான். இருவரும் நாட்டுக்குதீமையே செய்கின்றனர். ராஷ்டிரீய சேவக் சங்கத்தினர் ஹிட்லரையும், மிஸ்டர் ஜின்னாவையும் பின்பற்றுகின்றனர். ஹிட்லர் யூதர்களையும், மிஸ்டர் ஜின்னா ஹிந்துக்களையும் வெறுத்தார்கள். சேவக் சங்கத்தினர் முஸ்லிம்களை வெறுக்கின்றனர். ஹிட்லரும், ஜின்னாவும் ஜாதீய, கலாசார வேற்றுமைகளைத்தாங்கி நின்றனர். சேவக் சங்கத்தினரும் அதையே செய்துவருகின்றனர். ஹிட்லருக்கும், ஜின்னாவுக்கும் முடிவு கிட்டியாயிற்று. சேவக் சங்கத்தினருக்கும் அதேகதிதான் ஏற்படும். சேவக் சங்கத்தினர் மோசமான வெறிக்கு இலக்காகி யிருக்கின்றனர். முஸ்லிம்களும் இதே வெறிக்கு இலக்காகி யிருந்தார்கள். பிரிவினையால் மற்றவர்களைவிட அவர்களுக்கே அதிக நஷ்டம் ஏற்பட்டது. தலைவர்கள் அவர்களை மோசம் செய்துவிட்டு ஓடிவிட்டனர். அவர்களுக்கு இருந்து வந்த சலுகைகளும் முடிந்துவிட்டன. இன்று அவர்களுடைய நிலைகெட்டு, உறுதி தளர்ந்துவிட்டது. அரசாங்கம் மிஸ்டர் ஜின்னாவின் துக்கத்தைக் கொண்டாடக்கூடாதென்று தடை விதிக்காமலிருந்தும் மிஸ்டர் ஜின்னாவின் மரணத்தைக்குறித்து ஒரு சொட்டு கண்ணீர் வடிப்பதற்கும் இந்திய முஸல்மான்களுக்கு தைரியம் இல்லாமல் போனதே இதற்குப் போதிய உதாரணமாகும். பாகிஸ்தானில் மோசமான நிலைமை இருந்துவருகிறது. அங்கு அராஜகம், குழப்பம், கொள்ளை தலைவிரித்தாடுகிறது. அதிலிருந்து, ஹிந்து, வகுப்புவாதிகள் படிப்பினையை கற்றுக்கொள்ளவேண்டும். இன்றைய நெருக்கடியை சமாளிப்பதற்கு அரசாங்கத்துடன் மனப்பூர்வமாக ஒத்துழைக்க வேண்டும். ஆங்கில ஆட்சியில் நான்கு தடவை நடந்த சத்தியாக்கிரகம் காங்கிரஸ் ஆட்சியில் பதிமூன்று முறை நடந்திருப்பது வருந்தத்தக்க விஷயமாகும். சர்க்கார்விசுவாசமுள்ள சிப்பந்திகளும்கூட சத்தியாக்கிரகம் செய்திருக்கின்றனர். கிராம கர்ணம் முதல் மில் முதலாளிகள்வரை சர்க்காருக்கு எதிராக ஈடுபட்டிருக்கின்றனர். காந்திஜி காட்டியவழியில் நாம்நடக்கவேண்டும். அன்பு, அமைதி சகிப்புத்தன்மையிலேயே தேசத்தின் சுபிட்சமும் முன்னேற்றமும் அடங்கியிருக்கிறது.

———

# ஹைதராபாத் சமஸ்தானம்.

இதன் நிலப்பரப்பு 83,000 சதுரமைல். மொத்த ஜனத்தொகை ஒரு கோடியே அறுபத்தி மூன்று லட்சத்தில் இருபது லட்சம் பேர் முஸ்லிம்கள். (15 சதவிகிதம்) வருஷ வருமானம் பதினைந்துகோடியே எண்பத்தி மூன்று லட்ச ரூபாய். (1945-46 பட்ஜெட்படி) இதில் பீரார் சேர்க்கப்படவில்லை.

பீஹாரைப் போலவே ஹைதராபாத்திலும் பதினாறு ஜில்லாக்களிருக்கின்றன. ஆயினும் நிலப்பரப்பில் பீஹாரைவிட ஒன்றரை மடங்கு பெரிது.

அஸ்ஸாம், பம்பாய் மாகாணங்களைவிட பெரிதாகவும், கிட்டத்தட்ட ஐக்கிய வங்காளத்துக்கு சமமாகவும், ஒரிஸா, மைசூரைவிட மூன்று மடங்கும், ஸிந்துவைவிட ஒன்றரை மடங்கும், மேற்கு பஞ்சாபுக்கு சரியாகவுமிருக்கிறது.

ஜனத்தொகையில் பம்பாயைவிட கொஞ்சம் குறைவாக இருக்கும் இச்சமஸ்தானம் அஸ்ஸாமை விட ஒன்றரை மடங்கும், ஒரிஸாவைவிட இரண்டு மடங்கும், மேற்கு பஞ்சாபை விட அதிகமாயும் காஷ்மீர், ஸிந்துவைவிட மூன்று மடங்கும், மைசூரை விட இரண்டு மடங்கும் மத்திய மாகாணத்துக்கு சமமாகவும் இருக்கின்றது.

இதன் வருமானம் பீஹாரைவிட ஒன்றரை மடங்கும் ஒரிஸா, மத்திய மாகாணம், அஸ்ஸாமைவிட கிட்டத்தட்ட இரண்டு மடங்கும் ஐக்கிய மாகாணம், சென்னை, பம்பாய் மாகாணங்களின் வருமானத்தில் ஏறக்குறைய பாதியுமாகும். இதன் தலைநகரான ஹைதராபாத் சென்னை, பம்பாய், கல்கத்தாவுக்கு அடுத்தாற்போல் இந்தியாவின் நாலாவது பெரிய நகரமாகும். சமஸ்தானத்தில் நான்கு துணி மில்கள், ஒரு காகித தொழிற்சாலை, ஒரு சிமெண்ட் பாக்டரி, ஒன்றரை கோடி ரூபாய் மூலதனத்துடன் ஒரு ஸ்டேட் பாங்க் இருக்கின்றன்.

ஹைதராபாத் ரிஸர்வ்நிதி நாற்பத்திரண்டு கோடி ரூபாய் அத்துடன் கிட்டத்தட்ட நாற்பத்திரண்டு சோடி ரூபாய் சொந்த கரன்ஸி சிலாவணியிலிருக்கிறது.

நிஜாம் ஒரு சமஸ்தானாதிபதி மட்டுமின்றி இந்தியாவிலேயே பெரிய ஜமீன்தாருமாவார். சமஸ்தானத்தின் பத்தில் ஒரு பங்கு அதாவது 8,000 சதுர மைல் நிலங்கள் அவருக்கே சொந்தம். அதன் வருஷ வருமானம் ஒன்றரைக்கோடி ரூபாய். அதாவது தர்பங்கா மஹாராஜாவின் வருமானத்தை விட ஒன்றரை மடங்காகும்.

ஹைதராபாத்தில் உலகத்திலேயே முதல்தர உர்தூ சர்வகலாசாலையும் அதைச் சேர்ந்த ஆறு ஆர்ட் காலேஜ்களும், இஞ்சினியரிங், வைத்திய, சட்டக் கல்லூரிகளும், ஐந்நூறு தியேட்டர்களும், சமஸ்தான ரேடியோ நிலையமும் இருக்கின்றன. அச்சுத்தொழில் மிகவும் வளர்ச்சியடைந்திருக்கிறது. சொந்த நாணயங்கள் சிலாவணியாகின்றன. இந்தியாவின் நூறு ரூபாய் ஹைதராபாத்தின் ரூ. 116—10—8-க்குசமம். சொந்த தபால் இலாகாவும், 335 மைல் நீளமுள்ள சொந்த ரயில்வேயும், 300 மைல் நீளமுள்ள நேரோ கேஜ் ரயில்வேயும் உண்டு. 15,000 அரபியர்கள் 5,000 பட்டாணியர்களைக்கொண்ட நிலையான ராணுவமும், 8,000 பேர் கொண்ட நிலையற்ற ராணுவமும் உண்டு.

விளைபொருள்களில் முக்கியமானது பருத்தி, கரிசல் பூமியாகையால் பருத்தி நன்றாக விளைகின்றது. முப்பது லட்சம் ஏகர் நிலத்தில் பயிர் செய்யப்படுகின்றது. கோல்கொண்டா சுரங்கத்தில் தங்கம் கிடைக்கிறது. இங்குள்ள நிலக்கரி சுரங்கங்களிலிருந்து வருஷம் ஒன்றுக்கு கிடைக்கும் பன்னிரண்டு லட்சம் டன் நிலக்கரி தென்னிந்தியாவில் ஏறக்குறைய எல்லாத் தேவைகளையும் பூர்த்தி செய்கின்றது இங்கு புராதன ராஜ மாளிகைகள், கோட்டைகள், தேவாலயங்கள், மசூதிகள், பௌத்தர்களின் ஆஸ்ரமங்கள் ஏராளமாயிருக்கின்றன. இந்தியாவின் புராதன ஓவிய கலைக்கு எடுத்துக்காட்டாக பிரசித்தி பெற்றிருக்கும் எல்லோரா, அஜந்தா குகைகள் இங்குதானிருக்கின்றன. ஔரங்கசீப் ஔரங்கபாத்தில் அடங்கியிருக்கிறார். இத்துடன் இருநூறு வருஷங்களாக நிஜாம் சேர்த்து வைத்த புரட்சிகளால் பாதிக்கப்படாத கணக்கிட முடியாத செல்வம் வேறு இருக்கிறது.

1919-க்கு முன் சமஸ்தானத்துக்கு நிஜாமின் கட்டளைக்கு உட்பட்டு நடக்கும் ஒரு பிரதம மந்திரி இருந்து வந்தார். அதற்குப் பிறகு ஏழு அங்கத்தினர்களைக்கொண்ட நிர்வாகக் கமிட்டி அமைக்கப்பட்டது. இந்திய சர்க்கார் மெம்பர்களைப் போலவே அவர்களிடமும் இலாகாக்கள் பிரித்து ஒப்படைக்கப்பட்டன. இந்தியாவின் இதர மாகாணங்களில் மந்திரிகள் பெறும் சம்பளம் அதாவது மாதம் ஒன்றுக்கு 4,000 முதல் 7,000 ரூபாய் வரை இவர்களும் பெறுகின்றனர்.

இன்றிலிருந்து இருநூறு வருஷங்களுக்கு முன் முகல் அரசனான முஹம்மத்ஷா ரங்கேலா காலத்தில் நாதர்ஷா இந்தியாமீது படையெடுத்தபோது முகல் அரசாங்கத்தை மோசம் செய்து சுதந்திரப்பிரகடனம்

செய்த தக்காண சுபேதாரான நிஜாமுல்முல்க் ஆஸிப் ஜா ஆஸிப்ஜா வம்சத்துக்கு அடிகோலினான் இந்தியாவில் ஆங்கில ஆட்சியைவிட ஹைதராபாத் சமஸ்தானம் பழமையானது. அதற்கப்புரம் முதலில் பிரெஞ்சுக்காரர்களுக்கும் பிறகு ஆங்கிலேயர்களுக்குமாக அந்நிய சக்தியின் கைக்கருவிகளாக ஆஸிப்ஜா வம்சத்தினர் இருந்துவந்தனர். 1911-ல பட்டத்துக்கு வந்த இன்றைய நிஜாமான உஸ்மான் அலிகானும் தன்னுடைய மூதாதையரின் கொள்கையையே கடைப்பிடித்தார். இந்தியாவின் இதர சமஸ்தானாதிபதிகளைப் போலவே நாட்டின் சுதந்திரக் கிளர்ச்சியை நசுக்குவதில் முன்னணியிலிருந்ததுடன் ஆங்கில ஆட்சிக்குப் பலமான தூணாகவும் இருந்துவந்தார். கடைசியில் இந்தியாவிலிருந்து ஆங்கில ஆதிக்கம் அகன்ற பிறகு யதேச்சாதிகாரக்கனவு காணவும் முற்பட்டுவிட்டார்.

1948 செப்டம்பர் 18-ல் இந்திய சரித்திரத்தில் மாபெரும் சம்பவமொன்று நடந்தது. அன்று இந்திய ராணுவத்திடம் சரணடையும்படி நிஜாம் தன் ராணுவத்திற்கு உத்திரவிட்டார். இந்தியாவின் மத்தியிலிருந்த பிர்மாண்டமான செல்வம் மிகுந்ததோர் சமஸ்தானம் சுதந்திர இந்தியாவுக்குக் கிடைத்தது. அந்த வெற்றிக்குப்பிறகு காஷ்மீர்முதல்கன்னியாகுமரி வரை ஒரே மத்திய அரசாங்கத்தின் கீழ் பலமானதொரு நவ இந்தியா உருவாயிற்று. இவ்வளவுபெரும பகுதிஇந்தியா இன்று இருக்கும் அளவுக்கு இவ்வளவு சக்திவாய்ந்த இந்தியா ஒரு மத்திய அரசாங்கத்தின் கீழ் என்றுமே இருந்ததில்லை.

அரசியல் பிரமுகர்களில் மனச்சுமை நீங்கி ஒன்பது மாதங்களாக நிலவிய சந்தேகமும் அதிருப்தியும் முடிவடைந்தது. சிறந்த முறையில் பிரச்னை தீர்ந்ததைப்பார்த்து அனைவருமே ஆறுதலடைந்தனர். இவ்வளவு சுலபமான விஷயத்தை ஆரம்பத்திலேயே ஒப்புக்கொள்ளாமல் தட்டிக்கழித்து காலங்கடத்தி நிலைமையை இந்த அளவுக்கு என் மோசமாக்க வேண்டுமென்று பலர் கேட்கலாம். வகுப்புவாதப் பேய் தலைக்கேறிய பிறகு மனிதனுடைய மூளை வேலை செய்வதில்லை என்ற ஒரே பதில்தான் அவர்களுக்குக் கொடுக்கமுடியும்.

## ஹைதராபாத் வகுப்புப் பிரச்னை ஆனதெப்படி ?

நிஜாம் மீது எந்த குற்றத்தை வேண்டுமானாலும் சாட்டலாம். ஆனால் நிஜாமை வகுப்புவாதியென்று சொல்லுவது சரியல்ல. இவ்வித குற்றத்தை அவருருடைய எதிரிகளால்கூட அவர்மீது சாட்டமுடியாது அவர் ஆங்கிலேயரின் நண்பராக இருந்தார். விடுதலையின் விரோதியாக விளங்கினார், ஜனநாயகத்தை எதிர்த்தார். எல்லாம் உண்மைதான். இருப்பினும் அவர், வகுப்புவாதியல்ல. சாதுவுக்கும் ஜாதிப்பற்று உண்டு என்பது பழமொழி. அதைக் கருத்தில் கொண்டு பார்க்கும்போது நிஜாம் ஹிந்துக்களையும் முஸ்லிம்களையும் ஒரே நோக்குடன் நோக்கினாரென்பது விளங்கும்.

1919-க்குப் பிறகு ஹைதராபாத் பிரதம மந்திரிகளனைவரும் வைஸ்ராய் உத்திரவுப்படியே நியமிக்கப்பட்டனர். அவர்கள் அனைவரிடமும் ஆங்கில பக்தி மேலோங்கி யிருந்ததே யொழிய வகுப்பு வாதிகளாயிருக்க வேண்டியதவசியமென்று கருதப்படவில்லை. சத்தாரி நவாப், மிஸ்டர் சையத் அப்துல் அஸீஸ் போன்ற முஸ்லிம் லீக் பிரமுகர்களும் கூட பிரதம மந்திரிகளாக நியமனம் பெற்று ஹைதராபாத்துக்குச் சென்ற பிறகு தங்களுடைய வகுப்புவாதத்தை குழி தோண்டிப் புதைக்க வேண்டியிருந்தது. நீண்ட நாட்கள்வரை ஹைதராபாதின் பிரதம மந்திரியாக இருந்த ஸர் அக்பர் ஹைதரீயை பாய் பரமானந்தர், டாக்டர் மூன்சே போன்றவர்களும் கூட வகுப்பு வாதி யென்று சொன்னதில்லை.

ஸர் அக்பர் ஹைதரீயின் மரணம் ஹைதராபாத் சமஸ்தானத்திற்கு பெருத்த அடியாகவே யிருந்தது. உண்மையில் ஹைதராபாத் சமஸ்தானத்தை அவரே தாங்கி வந்தார். அவருக்குப் பிறகு அவரைப்போன்ற ஒருவர் அல்லது மிர்ஸா இஸ்மாயீலாவது பிரதம மந்திரியாக நியமிக்கப்பட்டிருந்தால் ஹைதராபாத் சமாளித்துக் கொண்டிருக்கும். மிர்ஸா இஸ்மாயீல் தேசீய வாதியாக இருந்ததுடன் பாகிஸ்தான் எதிரியாகவுமிருந்தார். ஆங்கிலேயரின் நோக்கங்களில் அவர் பொருந்தவில்லை. ஆகையால் அவரை அனுப்பாமல் சத்தாரி நவாப் அனுப்பப்பட்டார். அதிலிருந்து சிக்கல்கள் ஆரம்பித்தன. ஆங்கிலேயர்கள் பாகிஸ்தான் ஆதரவாளர்களை சமஸ்தான நிர்வாக கௌன்ஸிலுக்கு அனுப்பிவைத்தனர். மிஸ்டர் ஜின்னாவுடன் கலந்துகொண்டு அவர்கள் பொறுக்கி யெடுக்கப்பட்டனர். அதிலிருந்து ஹைதராபாத் சரித்திரம் மாறுதலடைந்து வகுப்புவாத சாபக்கேடு பரவ ஆரம்பித்தது.

( தொடரும். )

---


**ஆஸாத் சந்தாதாரர்களுக்கு**

வருட சந்தா ரூ. 6/— அனுப்பாமலிருக்கும் அன்பர்கள் மணியார்டர்மூலம் அனுப்பி ஆதரிக்க வேண்டுகிறோம்.

— மானேஜர், ஆஸாத், குடந்தை. —

# ஆஸாத்

தமிழ் தேசீய வாரப் பத்திரிகை.

மலர் 1 } 29—11—'48 திங்கட்கிழமை { இதழ் 41


## கம்யூனிஸத்தைத் தடுக்க ..?

ஒரு பக்கம் பர்மா, மலேயா, இந்தோனேஷியா சர்க்கார்களுக்கு எதிராக கம்யூனிஸ்டுகள் சதிசெய்கின்றனர். இன்னொருபக்கம் சீனாவில் கம்யூனிஸ்டு படைகள் முன்னேறிக்கொண்டிருக்கின்றன. கம்யூனிஸம் அங்கு வெற்றியடைந்து விட்டால் பிறகு இந்தியாவிலும் எதிரொலிக்குமென்பது நிச்சயம். அண்டை நாடுகளின் நிலைமையால் நாம் பாதிக்கப்படாமலிருக்க முடியாது. எனவே இந்தியர்களும் இந்தியத் தலைவர்களும் இந்தியாவில் கம்யூனிஸம் பரவாமல் தடுப்பதற்கான வழிகளைக்குறித்து சிந்தித்து வருவது இயற்கையாகும்.

உள்நாட்டுச் சண்டைகளுக்கும் அழிவுக்கும் காரணமான வர்க்கப்போராட்டத்துக்கு அடிகோலும் கம்யூனிஸத்தை பெருவாரியான இந்தியர்கள் எதிர்க்கின்றனர். இந்திய கம்யூனிஸ்டுகளுக்கு இந்திய நலனில் அக்கறையில்லை. அவர்களுடைய கடந்தகால சரித்திரமே இதற்கு சான்று. சுதந்திரத்துக்கு சதா முட்டுக்கட்டை போட்டு, வங்க சிங்கம் நேதாஜி சுபாஷ்சந்திர போஸுக்கு துரோகிப் பட்டம் கட்டி, ஆகஸ்டு புரட்சியில் ஆங்கிலேயருடன் பஹிரங்கமாய் ஒத்துழைத்த கம்யூனிஸ்டுகள் ஹைதராபாத் விஷயத்தில் காங்கிரஸுக்கு எதிராக சதிசெய்ததுடன் காஷ்மீர் பிரச்னையில் பாகிஸ்தானை ஆதரித்தும் வருகின்றனர்.

தங்கள் நாட்டில் தாங்கள் அன்னிய சக்தியால் ஆட்டிவைக்கப்படுவதற்கு இந்தியர்கள் தயாராயில்லை. மனசாட்சியைப்பறிகொடுத்து அன்னியர்களின் கைக்கருவிகளாக இருக்கும் கம்யூனிஸ்டுகளுக்கு இந்தியாவைப்பற்றி அக்கரையில்லையென்று இந்தியர்கள் நன்குணர்வர். ஆகையால் கம்யூனிஸ்டுகள் அதிகாரத்துக்குவருவதை பெரும்பாலான இந்தியர்கள் விரும்பவில்லை.

தொழிலாளிகள், விவசாயிகளுக்கு நியாயம் வழங்கப்படும் முறையில், சோஷியலிஸ அடிப்படையில், அதிகாரத்தை மக்களுள்கைக்கு மாற்றும் பஞ்சாயத்து முறை ஆட்சியின் அமைப்பே இந்தியர்களின் குறிக்கோள்

வறுமையிலும், பட்டினியிலும்தான் கம்யூனிஸம் பரவ முடியும். முதலாளித்துவ கொடுமைகளால் அவதியுறும் தொழிலாளிகள், விவசாயிகள், ஏழைகள் நசுக்கப்பட்ட மக்களுக்கு விமோசனமளிக்க ஒன்றும் செய்யாமல் அரசியல் தலைவர்கள் சுயநலத்தில் மூழ்கியிருக்கும் எந்த ஒரு நாட்டு மக்களையும் நிர்மூலசக்திகள் மயக்கி தவறான வழியில் இழுத்துச்செல்லுவது சுலபம். இதற்கு பாகிஸ்தான் ஏற்பட்டதே போதிய உதாரணமாகும். வெள்ளையர்களின் பாகிஸ்தான் திட்டம் வளர்ந்ததற்கு இந்தியாவின் குறிப்பானதொரு சூழ்நிலையே காரணம். முஸ்லிம் பாமரஜனங்களை தவறானவழியில் இழுத்துச்செல்ல சுயநலக்காரர்களுக்கு சந்தர்ப்பம்கிடைத்துவிட்டதால் பாகிஸ்தான் அமைந்துவிட்டது

ஒருசில முன்னணித் தலைவர்களை விட்டு மற்ற தலைவர்கள், ஊழியர்களுக்கு சுயநலம் மேலோங்கிவிட்டது. நாட்டின் முன்னேற்றத்திற்காக பாடுபடும் தலைவர்களை பலப்படுத்துவதற்கு பதிலாக பலஹீனப்படுத்துகின்றனர். அரசியல் அதிகாரத்துக்காக சுயநலக்காரர்களுகு ஊக்கமளிக்கின்றனர். தொழிலாளிகள், விவசாயிகளின் நடுவே சென்று அவர்களுக்கிருந்துவரும் குறைகளையறிந்து சரியான வழிகாட்டுவதற்கு நம் தலைவர்களிடம் திட்டமோ ஆர்வமோ யில்லை. சர்க்கார் அதிகாரிகள் கடமைகளை உணராததால் லஞ்சமும் ஒழுங்கீனமும் மலிந்துவிட்டன. கள்ள மார்க்கெட் ஒழிந்து குறைந்த விலையில் மக்களுக்கு பண்டங்கள் கிடைத்து நாட்டின் உற்பத்தி பெருகி மக்களின் வாழ்க்கைத்தரம் உயரவேண்டுமென்று பாடுபடும் நம் தலைவர்களின் வழியில் நம்முடைய சுயநலம் முட்டுக்கட்டை போடுகின்றது. அதன் பயனாக கஷ்டப்படும் ஜனங்களையும் பொறுமையிழந்துவரும் விவசாயிகள், தொழிலாளிகளையும் நிர்மூலசக்திகள் தவறான வழியில் இழுத்துச்செல்லப் பார்க்கின்றன.

நம்முடைய சுயநலத்தால் நாட்டில் ஏற்பட்டிருக்கும் குழப்பத்தை நாட்டை அழிவுத்துறையில் இழுத்துச்செல்ல விரும்பும் சக்திகள் பிரயோஜனப்படுத்திக்கொள்ளுகின்றன. சேவக் சங்கம், அகாலித்தலைவர்கள் தலைதூக்கியிருக்கின்றனர் தடைவிதிக்கப்பட்டிருந்தும் ஒரு ஸ்தாபனம் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிறது. மீண்டுமொருமுறை பஞ்சாப் மாகாணத்தை வகுப்புவாதப் படுகுழியில் தள்ளமுயற்சிகள்

# — போக்கிடமில்லாத முஸ்லிம்கள். —

முஸ்லிம்கள் என்ற ஒரே காரணத்துக்காக அரபியர்களும், பட்டாணியர்களும் யு பி; ஸி. பி. மாகாணங்களைச் சேர்ந்த இந்தியர்களும் ஹைதராபாத்திலிருந்து வெளியேற்றப்படுவதாக பாகிஸ்தான் பத்திரிகைகள் முதலைக்கண்ணீர் வடிக்கின்றன.

1947 ஆகஸ்ட் 15-க்கு முன்னுலிருந்து அங்கு நிரந்தரமாய் குடியிருந்துவரும் ஒரு முஸ்லிம்கூட வெளியேற்றப்படவில்லையென்பது திண்ணம். அப்படியிருந்துவந்த அரபியர்கள், பட்டாணியர்கள் இந்திய முஸல்மான்கள் இந்திய சர்க்காரின் ராணுவ அதிகாரிகளிடம் விசுவாசத்துடன் நடந்துகொள்ளுகின்றனர். அவர்களில் யாருமே வெளியேற்றப்படவில்லை.

கடந்த ஒரு வருஷத்துக்குள் இந்தியாவுக்கு எதிராக "புனிதயுத்தம்" செய்ய காஸிம் ரஸ்வியால் இறக்குமதி செய்யப்பட்ட வெளியார்கள் வெளியேற்றப்பட்டு வருவது உண்மைதான். பாகிஸ்தான் பத்திரிகைகளுக்கு நியாய புத்தியிருந்தால் இந்தியாவுக்கு தீங்குசெய்யும் நோக்கத்துடன் ஹைதராபாத்தில் திரட்டப்பட்ட அரபியர், பட்டாணியர்களை வெளியேற்றி அவரவர்களுடைய நாடுகளுக்கு அனுப்புவது சரியல்லவென்று சொல்லமுடியுமா ?

ஆனாலும் யு. பி; ஸி. பி. முதலிய இதர மாகாணங்களிலிருந்து புனித யு த்தின் பெயரால் மதிமயங்கி அறிவிழந்து தங்கள் வீடு வாசல்களைவிட்டு ஹைதராபாத்தில் குடியேறிய முஸ்லிம்களின்பாடு அதோகதியாய்விட்டதென்பது வாஸ்தவந்தான். அவர்கள் விட்டுச்சென்ற வீடுகள், சொத்துக்கள்யாவும் பாகிஸ்தானிலிருந்து வந்த அகதிகளுக்கு கொடுக்கப்பட்டுவிட்டன. இந்நிலையில் ஹைதராபாத்திலிருந்து வெளியேற்றப்பட்ட பிறகு அவர்களுக்கு போக்கிடமில்லை. பாகிஸ்தான் கதவிலும் "உள்ளே பிரவேசிக்கக்கூடாது" என்ற போர்டு தொங்க விடப்பட்டிருக்கிறது. ரஜ்வியை நம்பி மதிமோசம்போன முஸ்லிம்களுக்கு இன்று இந்தியாவிலும் இடமில்லை; பாகிஸ்தானிலும் இடமில்லை.

பாகிஸ்தான் அரசாங்கத்துக்கு முஸ்லிம்களைப் பற்றி இம்மியும் அக்கரை இருந்தால் புனித யுத்தத்தின் பெயரால் யு பி; ஸி. பி முதலிய இதரமாகாணங்களிலிருந்து ஹைதராபாத் சென்று ரஸாக்கர்களாக பதிவு செய்துகொண்டு இன்று மாறுவேஷத்துடன் திருடர்களைப்போல் பல்வேறு கிராமங்களில் சுற்றித் திரியும் ஐந்து அல்லது ஆறு லட்சம் இந்திய முஸல்மான்களுக்காவது புகலிடம் அளிக்க முன்வரவேண்டும். இப்படிச்செய்வதால் பாகிஸ்தானின் "இஸ்லாமிய பொருளாதாரம்" வளர்ச்சியடைய முடியுமென்பதே நம் முடிவு.

---

நடக்கின்றன. இந்தியாவை திரும்பவும் பிரிக்கவேண்டுமென்று கோரும் கோடரிக்காம்புகளுக்கு பாமரமக்களை மயக்க சந்தர்ப்பம் கிடைத்திருக்கிறது. கம்யூனிஸ்டுகளின் நாசவேலைகள் நின்றபாடில்லை.

கம்யூனிஸ, வகுப்புவாத சாபக்கேடுகளை வாய்வீச்சுகளால் முறியடிக்கமுடியாது. நிர்மாணத்திட்டங்களின்மையால் ஏற்படக்கூடிய இடைவெளியை ஏதாவதொருசக்தி பூர்த்திசெய்தே தீருமென்பது நிச்சயம். அது வகுப்புவாதமாக இருக்கலாம். கம்யூனிஸமாக இருக்கலாம்; அல்லது வேறுஎந்த ஈஸமாகவும் இருக்கலாம். அதைத்தடுக்க ஒவ்வொரு இந்தியனும் தன் கடமையை உணரவேண்டும் கள்ள மார்க்கெட்டில் கொள்ளை லாபமடித்து தொழிலாளி, விவசாயிகளை கசக்கிப் பிழிந்து அக்கிரமமாய் சம்பாதித்த செல்வம் ஒருக்காலும் நிலைத்திருக்க முடியாது. நிர்வாகத்தில் இருந்துகொண்டு நேர்மையற்ற முறையில் நடப்பவர்கள் காலப்போக்கில் பாதிக்கப்படாமலிருக்கமுடியாது மக்களை தவருனவழியில் இழுத்துச்செல்லும் பத்திரிகைகளும் தலைவர்களும் தங்களுடைய நாட்டில் நாசத்தையே அழைக்கின்றனர். மஹாத்மா காந்திஜி நமக்குக் காட்டியவழியில் நடந்து பண்டித ஜவஹர்லால்நேரு நமக்கு போதித்துவரும் போதனையை பின்பற்றினுல் இந்தியாசுபிட்சமடையமுடியும். சமாதானத்தின் உறைவிடமாக விளங்கமுடியும். நம்மில் ஒவ்வொருவரும் லட்சிய வழியில் நடந்து பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேருவின் கைகளை பலப்படுத்தாவிட்டால் கம்யூனிஸ, வகுப்புவாத சண்டமாருதத்தை எவராலும் தடுக்க முடியாது

---

**'ஆஸாத்'**

**பணத்தை வைத்துக்கொண்டு கொடுக்காமலிருக்கும் ஏஜண்டுகளின் பெயர்கள் பணம் கொடுக்கும் வரை வாரந்தோறும் இங்கு வெளியிடப்படும்.**

ஏஜண்டு பெயர்:

**அப்துல் சலாம்**, ஈரோடு.

# சரியான வழி.

—[ பண்டித சுந்தர்லால் ]—

நாட்டில் சமாதான செல்வத்துக்கு கலவரத்தீப் பிடித்து ஒரு வருஷமாயிற்று பொசுங்கிப்போனதென்ன? மிச்சமிருந்ததென்ன? என்று கவலைப்படுவதற்கு அவசியமுமில்லை. சந்தர்ப்பமுமில்லை. காலம் வேகமாய் முன்னேறிவிட்டது. சரித்திரத்தின் இருள் நிறைந்த அத்தியாயம் முடிவடைந்து வருங்கால நம்பிக்கை சகாப்தம் துடங்கிவிட்டது.

தேசியவாதிகள் வீறுகொண்டெழுந்தனர். காங்கிரஸ் சுதந்திரக் கொடியை உயர்த்திற்று. சுதந்திரப் பித்தர்கள் சுதந்திரச் சுடரில் விட்டில் பூச்சிகள்போல் விழுந்தனர் சிறைக் கஷ்டங்களை சகித்து, தூக்குக் கயிற்றை முத்தமிட்டு, அடக்குமுறை ஆட்சியின் அக்கிரமங்களுக்கு பெண்கள், ஆண்கள், குழந்தைகள், இலக்கான பிறகு லட்சியம் கிட்டி, இந்தியாகள் வெற்றிமாலை சூடும் காலம் வந்தது மாபெரும் போராட்டங்கள் எப்பொழுதுமே இப்படிதான் முடிந்திருக்கின்றன.

அதற்கு நேர்மாறாக முஸ்லிம்லீக், நாசகரமான இருசமுதாயக் கொள்கையைப் புகுத்தி, இயற்கைக்கு மாறான பிரிவினையை வற்புறுத்தி, பாயும் நதியில் கிழித்திருக்கும் பிரிவினைக்கோடு, எத்தனை நாள் வரை நிலைத்திருக்குமென்று சொல்லுவதற்கில்லை. ஆயினும் இஸ்லாமின் பெயரால் பாமர முஸ்லிம்களைத் தூண்டிசிக்க வைத்துவிட்ட சக்தியிலிருந்து முஸ்லிம்கள் மீளுவது கொஞ்சம் சிரமமென்றே தோன்றுகிறது. பைத்தியக்காரப் போக்கின் பலனாக பாகிஸ்தான் ஏற்பட்டிருப்பினும் சமூக ஐக்கியம் சிதறுண்டு, சரித்திரப் பெருமைபாழடைந்து, ஆயிரம் வருஷங்களின் நாகரீகம் மண்ணாகி, மானமும், கௌரவமும் பறிபோய்விட்டது எல்லாவற்றையும் இழந்ததால் ஏற்பட்ட அதிர்ச்சி சந்தேகங்கள், அசுத்தமான எண்ணங்கள், அவநம்பிக்கை, ஏமாற்றம், ஏக்கம் முதலிய துரதிருஷ்டங்களை உள்ளங்களில் புகுத்திவிட்டது அதன் கோரத்தைக் கண்டு முஸ்லிம்கள் நடுங்குகின்றனர்.

அவர்கள் குழப்பமடைந்திருப்பதை கண்ணீர் தேங்கிய அவர்களுடைய கண்களே காட்டுகின்றன. இன்று ஒன்றுமே புரியாமல் நாம் நம்பியிருந்த மோசக்காரர்கள், நாட்டின் அமைதிக்குப் பங்கம் விளைவித்து நம்மை நரக வேதனையில் தள்ளிய சண்டாளர்கள், நிரபராதிகளின் ரத்தத்தில் மஞ்சநீராடிய ஹலாகுகள், சங்கேஸ்கான்கள்; மனித வேஷத்தில் நடமாடிக்கொண்டிருந்த கொடுவிலங்குகள் எங்கே? என்று கேட்கின்றனர் என்ன செய்வோம்? இனி நாம்

முஸ்லிம்லீக் விஷ விருட்சம் துளிர்விடாமலிருந்த அன்றே; அதன் விஷக்காற்றால் மனிதர்களின் அறிவும், உள்ளங்களும் பாதிக்கப்படாமலிருந்த அப்பொழுதே; குருடர்கள் செவிடர்களாயிருந்த முஸ்லிம்களை அறிவாளிகள் எச்சரித்தனர். "நீங்கள் மேற்கொண்டிருக்கும் வழி நாசகரமானதும் அழிவுப்படுகுழியில் இழுத்துச்செல்லும் வழியுமாகும் இந்த நாட்டில் இரண்டு சமுதாயங்களில்லை; ஹிந்துக்களும், முஸ்லிம்களும் தனித்தனிசமுதாயங்களல்ல; இருவரும்பாரதத்தாயின் இரண்டு கண்களேயாவர்; இரண்டில் எதையும் பிரிக்க முடியாது. ஹிந்துக்கள் முஸ்லிம்கள் இருவரும் பாரதநாட்டின் இரண்டு கரங்கள்; கரங்களின்றி ஒன்றும் செய்வதற்கில்லை இந்த எழுச்சி ஹிந்து அல்லது முஸ்லிம்களின் எழுச்சியல்ல; நாட்டு மக்களின் எழுச்சியேயாகும். அவரவர்களுடைய இஷ்டப்படி கடவுளை வணங்க ஒவ்வொருவருக்கும் உரிமையுண்டு; காற்று, ஜலம், சூரியன், சந்திரன், நட்சத்திரங்கள், ஆகாயம், பூமி எல்லோருக்கும் பொதுவாக இருப்பதைப்போலலே நாட்டுப்பற்றுடன் நாட்டின் கௌரவத்துக்காக சேவை செய்யவும் உயிரை அர்ப்பணிக்கவும் தயாராயிருக்கும் அனைவருக்குமே நாட்டின் சுதந்திரம் பொதுவாக இருக்கும்" என்று ஒரு முறை இரண்டுமுறை யல்ல; ஆண்மையுள்ளவர்கள் ஆயிரம் முறை எடுத்துக்காட்டினார்கள்.

சுருக்கமாக முஸ்லிம்களுக்கு சொல்லப்பட்டது இதுதான். இதவே இயற்கையின் முடிவாகவுமிருந்தது. இயற்கை யாருக்காகவும் தன் முடிவை மாற்றிக்கொள்வதில்லை. ஆயினும் முஸ்லிம்கள் அதை ஏற்க மறுத்துவிட்டனர். அதனால் கிடைத்த தண்டனையிலிருந்து அவர்கள் படிப்பினையைக் கற்க வேண்டும். இன்று பீதியும், ஏமாற்றமுமடைந்திருக்கும் முஸ்லிம்கள் நேரான விஷயத்தை நிராகரித்து பித்தலாட்டக் காரர்களின் பேச்சைக் கேட்டு அடைந்த பெருநஷ்டத்தையும் உன்னத நிலையிலிருந்து தாழ்வுப் படுகுழியில் விழுந்துகிடப்பதையும் பற்றி சிந்திக்கவேண்டும்.

தவறான வழியில் சென்று இழிவும், அழிவும் அடைந்த முஸ்லிம்களைக் குறித்து ஆகாயம் கண்ணீர் வடித்ததா? பூமிதான் அதிர்ச்சி யடைந்ததா? இல்லை! தெய்வ சங்கல்பத்துக்கும் இயற்கைக்கும் மாறாக நடந்து தண்டனை அனுபவிப்பவர்களுக்கு பூமியும் குறுகிவிடும். ஆகாயமும் விலகிவிடும்.

இன்று முஸ்லிம்களுக்கு ஒரே வழிதானுண்டு. எனவே ஒரே விஷயத்தைத்தான் அவர்களுக்கு சொல்

# லீக்பெயரால்நடந்த கணக்கற்றஊழல்களில் ஒருஉதாரணம்

## மேலப்பாளையம் முஸ்லிம் லீக் நடவடிக்கை.

நோட்டீஸ் கொடுக்கப்பட்ட 18 முஸ்லிம் லீக் தொண்டர்கள் பணம் வசூல் செய்திருக்கலாம். அதை செலவிட்டிருக்கலாம். அது நமக்கு பிரச்னையல்ல. ஆனால் அவர்கள் தொகையை பாகிஸ்தானுக்கு அனுப்பவில்லையென்பது மாத்திரம் அவர்கள் தெரிவித்துக் கொள்ளும் ஒரு உண்மை என்பது தெரிகிறது.

திருநெல்வேலி ஜில்லா; மேலப்பாளையம் இதனடியில் கண்ட ஜனுப்களாகிய:—

1. T. S. M. O மம்மது உதுமான், புலிபுதுத் தெரு, மேலப்பாளையம்.
2. R N. அப்துல் ஹமீது, அத்தியடி நடுத்தெரு, மேலப்பாளையம்.
3. L. K. S. மம்மது, உச்சிலி லெப்பைத்தெரு, மேலப்பாளையம்.
4. ஹதீப், செ. அ. ஷேகுஉதுமான், மேத்தமார்பாளையம் நடுத்தெரு, மேலப்பாளையம்.
5. பருத்தி, ஷாகுல் ஹமீது, பூலிபுதுத்தெரு, மேலப்பாளையம்.
6. வெள்ளிக்கண்ணி, V. S. மகம்மது உசைன், மூலன் அகம்மது பிள்ளைத்தெரு, மேலப்பாளையம்.
7. M L. மகம்மது லெப்பை, டெக்ஸ்ட்டயில்—ஸ்டோர்ஸ், அத்தியடித்தெரு, மேலப்பாளையம்.
8. தக்கடி புகாரி, அசன் தாகன்தெரு, மேலப்பாளையம்.
9. புலவர், இஸ்மாயில், வ. அ. பெரிய தெரு, மேலப்பாளையம்.
10. சுக்கன்புகாரி S/o சுக்கன் செய்யதுமகம்மது அசன்தாகன் தெரு, மேலப்பாளையம்,
11. கொத்தலெப்பை ஜாபர் ஷாதிக், மூப்பன்பக்கீர் தெரு, மேலப்பாளையம்.
12. கா. மு. மைதீன்பிள்ளை S/o காளை முகம்மது -மைதீன். தெற்கு மைதீன்- பள்ளிவாசல் தெரு, மேலப்பாளையம்.
13. காளைகோஸ் S/o காளைமொன்னு முகம்மது. செய்யது லெப்பைத்தெரு, மேலப்பாளையம்.

---

லவும் முடியும். சிதறிய உங்கள் எண்ணங்களை ஒரு முகப்படுத்துங்கள். வீண் சந்தேகங்கள் அவநம்பிக் கைகளை விடுங்கள். இந்த நாட்டை தாயகமாகக் கொள்ளுங்கள் இந்த நாட்டில் உங்களுக்கும் உரிமை யுண்டு. உங்கள்மீது நாட்டுக்கு உரிமை யுண்டு. உங்கள் நாட்டை கெட்ட எண்ணத்துடன் யார் நோக்கினாலும் நாட்டின் கௌரவத்தைக் காக்க அவர்களுடைய கண்களை நோண்டி விடுங்கள். உங்கள் நாட்டை அழிக்க உயர்த்தப்படும் கைகளை வெட்டி வீழ்த்துங்கள். கடமையைச் செய்வதில் உயிரையே அர்ப்பணிக்க வேண்டியிருப்பினும் மானத்தை இடிக்கவேண்டியிருப்பினும் கேவலத்துக் குள்ளாகவேண்டியவரினும் அனைத்தையும் சகித்து தாய்நாட்டின் கௌரவத்தை காப்பதாக சபதம் செய்யுங்கள். லட்சம் முறை துரோகிகளென்று இழித்துப் பேசினாலும் சேவையைக் கைவிடாதிருங் கள். உலகம் சந்தேகப்பார்வையுடன் நோக்கினாலும் தேசப்பற்று இழக்காதிருங்கள். கடைசி மூச்சு வரை நீங்கள் உறுதியுடன் இருந்தால் நீங்கள் வெற்றி யடைவது நிச்சயம். இன்று இல்லையேல் நாளை உலகம் உங்களை தேசிய வீரர்களென்று அழைக்கும். வெற்றி மாலை உங்களுக்கும் அணிவிக்கப்படும்.

அவ்வித உறுதியும் ஆர்வமும் இல்லையென்றால்; தடுமாற்றமும் அவநம்பிக்கையும் உங்களைவிட்டு அகல வில்லை யென்றால் தயவுசெய்து இந்த நாட்டை விட்டே வெளியேறி விடுங்கள். உங்களுக்கு பிடித்த மான இடத்துக்குப்போய்விடுங்கள். சந்தேகப்படும் முறையில் வாழ்பவர்கள் தங்களுக்கே சாபக்கேடாக வும் மற்றவர்களுக்கு தொல்லையாகவுமே இருப்பர். ஒவ்வொருமனிதனுக்கும் இரண்டு வழிகளும் திறந் திருக்கின்றன உங்கள் கண்களின் பார்வையும் காதுகளின் கேள்வியும் பறிபோய்விடவில்லை யென்றால் இன்னும் சிந்திப்பதற்கும், உணர்வதற்கும் சந்தர்ப் பமிருக்கின்றது. உங்கள் வழிகாட்டிகளைக் கலந்து கொண்டு சரியான ஒரு வழியை நிர்ணயித்துக் கொள் வதற்கு இன்னும் அவகாசமிருக்கிறது தேசிய ஊழியத்தின் அரங்கம் முன்பிருந்ததை விட விஸ்தரித் திருப்பதையும் தங்கள் திறமையை நிரூபித்துக்காட்டு வதற்கு இன்று அவசியம் ஏற்பட்டிருப்பதையும் தேச சேவை செய்யும் தொண்டர்கள் உணரவேண்டிய தும் அவசியமாகும்.

14. நண்டு முகம்மது மசூது S/o ஷாகுல்ஹமீது,
தெற்கு தைக்காத் தெரு,
மேலப்பாளையம்.

15. கொத்துவா லெப்பை முகம்மது செயினு-
S/o முகம்மது மைதீன்,
மோத்தைமீருப்பிள்ளை தெரு, மேலப்பாளையம்.

16. சீ. காதர் மொய்தீன் S/o ஷேகு முகம்மது,
ஹாமீம்புரம், மேலப்பாளையம்.

17. ஜமால் செய்யதுமகம்மது ஆலிம்ஸா-
S/o அகம்மதல்லி ஆலிம்ஸா,
பள்ளிவாசல்மூப்பன்தெரு மேலப்பாளையம்.

18. சுல்தான்,
செய்யதுலெப்பைத்தெரு, மேலப்பாளையம்.

உங்கள் பதினெட்டு பேர்களுக்கும்:—

திருநெல்வேலி ஜில்லா; மேலப்பாளையம், பெரிய தெருவிலிருக்கும் பூலி அப்துல்லா குமாரர் **பூலிசெய்யது அகம்மது வகையறுக்கள்:**— திருநெல்வேலி ஜக்ஷனில் K. V. ராமகிருஷ்ண அய்யர்-வக்கீல் ஆகிய எனக்குக்கொடுத்திருக்கிற இன்ஸ்ட்டரக்ஷன் பேரில் நான் உங்களுக்குக் கொடுக்கிற ரிஜிஸ்ட்டர் நோட்டீஸ் என்னவென்றால்:—

அன்புள்ள ஐயன்மீர்!

மேலே காட்டிருக்கிறவர்களாகிய நீங்கள் மேலப்பாளையத்தில் (a) நெசவாளர் சங்கத்தின் பேராலும், (b) முஸ்லிம்-லீக் பேராலும்; ரசீதுகள் கொடுத்து.

1. பாகிஸ்தான் தேர்தல் நிதி என்றும்.

2. பாகிஸ்தான் வெள்ளிக்குண்டு நிதி என்றும்.

3. பாகிஸ்தானை ஸ்தாபனஞ்செய்ய ஏற்பட்ட நிதி என்றும்.

4 பாகிஸ்தான் கட்டிட நிதி என்றும்.

5. சென்னை மாகாணம்; நெல்லை ஜில்லா மேலப்பாளையம் டவுன் மூஸ்லிம்லீக் கட்டிட நிதிகளென்றும்.

6 மாகாணம், ஜில்லா முஸ்லிம்லீக் மகாநாடுகள் கூட்டங்கள் நடத்துவதற்கும்.

7. மேலப்பாளையம் Shooting Case செலவுகளுக்கென்றும்.

இன்னும் பற்பல விஷயங்களைச்சொல்லி ஏமாற்றி கட்டாயத்தீர்மான அமலுடன் மேலப்பாளையம் பாமர ஏழை இந்து—முஸ்லிம் நெசவாளர்களிடம் கூப்பன் பேராலும்; தெருக்கொந்து விகிதாசாரப்படியும் ஏலத்தின் பேராலும்; நெசவாளர் சங்கத்தின் பேராலும், கொழும்பு முதலிய வெளியூர்களிலுமிருந்தும் சுமார் ரூபாய் 50,000/-ம் வரையும்; இன்னும் இதுபோக இவ்வூரிலுள்ள செல்வந்தர்களிடம் ஆள்கள் விகிதாசாரத்தைப் பொறுத்து நபர் ஒன்றுக்கு ரூபாய் 1000/-க்கு குறையாமல் வசூல் செய்த ரூபாய் 50,000/-ம் ஆகமொத்தம் ஒரு லக்ஷம் ரூபாய் வரை வசூல் செய்தீர்கள்.

ஷை வசூல்களுக்கு நமது கக்ஷிக்காரர்கள் இது பரியந்தமும் கண குக் கேட்டுவந்ததில் நீங்கள் ஒழுங்காய் கணக்குக்கொடாமல் மறைபொருளாக வைத்து நடத்திக்கொண்டிருப்பதினால் இன்று நான்உங்களுக்கு இதன் மூலமாக நோட்டீஸ் கொடுக்கிறேன் இது நோட்டீஸ் பார்த்த ஒரு வாரத்திற்குள்மேலேகாட்டிய விபரப்படி வசூலித்த தொகை ரூபாய் ஒரு லட்சத்திற்கும் வரவு—செலவு கணக்குகளுடன்; மீதியிருப்பு தொகை ரூபாய் இவ்வளவு என்பதும்; அத்தொகை இன்னாரிடம் இருக்கிறதென்றும், நமக்காவது அல்லது நம் கட்சிக்காரர்களுக்காவது எழுத்துமூலம் தெரிவிக்க வேண்டும்.

அப்படி தெரிவிக்கத்தவரும் பட்சத்தில் சட்டப்படி கோர்ட்டு மூலமாய் நடவடிக்கை எடுப்பதுடன் அதினால் எற்படும் சகல செலவுகளுக்கும் நஷ்டஈடுகளுக்கும் உங்களிடமே இருந்து வசூலிக்கப்படும் மென்பதையும் இதினால் தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Sgd:- K. V. ராமகிருஷ்ண அய்யர்,
வக்கீல் 10—11—48.

---

மன்னார்குடி

## நேத்தாஜி தொண்டர்படை "ஹிந்தி தீவிர பிரசாரக்கமிட்டி" நிறுவப்பட்டது.

மன்னார்குடி நவ. 17.

இன்று பிற்பகல் மணி 3-க்கு நிர்வாக கமிட்டி மெம்பர்களும், பலமுக்கியஸ்தர்களும் விஜயம் செய்து கூட்டம் ஆரம்பமாகியது. ஹிந்தி பிரசாரசம்பந்தமாக கொண்டுவந்த தீர்மானம் மெம்பர்களால் விவாதிக்கப்பட்டு ஏகமனதாக ஆமோதிக்கப்பட்டு தீர்மானம் நிறைவேறியது, உடனடியாக அதிராம்பட்டணம் I.N.A. சேவாதளக் கமிட்டி காரியதரிசி M. E. கமால், தொண்டர்படை கேப்டன் N. தங்கையன், திருமலைரூயன்பட்டணம் மாஜி (பர்மா) ஹரிஜன சேவா சங்க பொதுக் காரியதரிசி கோ. லோகநாதன், மேலநத்தம் A, வேலாயுதம் இவர்களை "ஹிந்தி தீவிர பிரசாரக் கமிட்டி" யினராக தேர்ந்தெடுக்கப்பட்டதும் கேப்டன் N. தங்கையன் அவர்களால் வந்தனோபசாரம் கூறப்பட்டு கூட்டம் இனித்த கலைந்தது,

டி. ஜேம்ஸ்,
காரியதரிசி.

# வேதாரண்யத்தில் ஸ்யாம்லால்.

காந்திஜியின் கனவு நினைவானதை இன்று கண்டேன்.

கஸ்தூரிபா தேசீய ஞாபகார்த்த நிதியின் காரிய தரிசி ஸ்ரீஸ்யாம்லால் சென்ற 20—11—48ந்- தேதி மாலை6-30 மணிக்கு வடக்குவீதி சத்தியாக்கிரக ஞாபகார்த்த இடத்திற்கு எதிரில் சர்தார் அ. வேதரத்னம் அவர்கள் தலைமையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசும்போது வேதாரண்யத்திற்கு அருகாமையில் மகாராஜபுரத்தில் நடந்துவரும் ஆதாரப் பாடசாலையில் ஹரிஜனப் பெண்களும் பிராமணப்பெண்களும்இதர வகுப்பு பெண்களும் ஒரு குடும்பம்போல் வகுப்பு வித்யாசம் இன்றி நடந்து வருவதைப் பார்க்க காந்திஜி கண்ட கனவு இங்கு நினைவாக மாறி யிருப்பதைக் குறிப்பிட்டு கஸ்தூரிபா நிதியின் மூலமாக இந்தப்புரட்சியை இந்திய கிராமங்களில் பரப்ப விரும்பினர் என்றும் காந்திஜியை இந்தக் கஸ்தூரிபா நிதிக்கமிட்டியில் தலைமைப்பதவியை ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொண்ட போது மூன்று கண்டிஷன்கள் குறிப்பிட்டு அதற்குச் சம்மதித்தால்தான் தாம் தலைமைப்பதவியை ஏற்கமுடியும் என்றும் அதற்கு இணங்கவே தலைமையையேற்றதாயும் அந் நிபந்தனைகள்.

1. இந்நிதி பூராவும் இரண்டாயிரம் ஜனத்தொகைகளுக்குக் குறைந்த கிராமங்களில்தான் செலவிடப்படவேண்டும்.

2. பெண்கள் குழந்தைகள் நலத்திற்கு மட்டும்தான் இந் நிதி செலவிடப்பட வேண்டும்.

3. வகுப்புமத வித்தியாசம் இல்லாமல் எல்லோருக்கும் பயன் படும் முறையில் ஸ்தாபனங்களும் வேலைத் திட்டங்களும் இருக்கவேண்டும் என்றும் இந்த நிர்வாகம் முழுவதும் பெண்களிடமே இருக்க வேண்டும். என்றும் மருத்துவப் பயிற்சி ஆதாரப் பள்ளி, குஷ்ட-ரோக நிவர்ரணம், போன்ற நிர்மாண வேலைகளில் இந்த ஸ்தாபனங்கள் செய்துவரும் வேலைகளின் விபரமும் மற்ற மாகாணங்களை விட தமிழ் நாடு இவ்வேலைகளில் முன்னேறி வருவதாகவும் புள்ளி விவரங்களுடன் நீண்டநேரம் அறிய சொற்பொழிவு நிகழ்த்தினர்.

அடுத்தபடியாக மேற்படி நிதியின் தமிழ் நாடு ஏஜண்டு டாக்டர் சௌந்திரம், ராமச்சந்திரன் பேசுகையில் தமிழ் நாட்டில் இந்த நிதியின் மூலம் நடைபெற்றுவரும் வேலைகள் பற்றிய பூரா விவரங்களும் அறிவித்து தஞ்சை ஜில்லாவிலேயே இவ்வேலை நன்கு வளர்ந்து வருவதைச் சுட்டிக் காட்டி இந்த திருத்துறைப்பூண்டி தாலூகாவில் துளஜாபுரத்தில் ஆதாரப் பள்ளியும், மருத்துவசாலையும் நல்ல முறையில் நடந்து வருவதையும் கரியபட்டணத்தில் மருத்துவசாலை நடப்பதையும் மகாராஜபுரத்தில் நடக்கும் ஆதாரப்பாடசாலை மூன்று ஆண்டு செய்திருக்கும் வேலை பற்றியும் நாகை தாலூகா வலிவலத்தில் நடந்துவரும் மருத்துவசாலை வேலைகள் பற்றியும் குறிப்பிட்டுவிட்டு இன்னும் பல விடங்களில் ஸ்தாபனங்கள் ஏற்படுத்த விண்ணப்பங்கள் வந்தவண்ணம் இருப்பதாயும் போதிய பெண் ஊழியர் இவ்லாததால் அவைகளைக் கவனிக்க முடியவில்லை என்றும் ஸ்தாபனங்களை அமைக்க விரும்புவோர்கள், பெண் ஊழியர்களைப் பயிற்சிக்கு அனுப்பவேண்டும் என்று விண்ணப்பித்துக் கொண்டார்கள். கூட்டத்தின் ஆரம்பத்தில் பேசிய கீரலத்தூர் க. மீனாட்சி சுந்திரம் பிள்ளை நிர்மாணவேலைகளின் சிறப்பை விளக்கி கூறிய பின்காந்தியடிகளின் இந்த.சிறந்ததிட்டங்களையும்ஹிந்தியைக் கண்டித்தும் சுய தேவைத் திட்டத்தை இந்த சொற்பகாலத்திற்குள் பெரும் அளவில் பூர்த்தி செய்திருக்கும் பிர்க்கா அபிவிருத்தித் திட்டத்தைக் கண்டித்தும் தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டித் தலைவர் ஸ்ரீ காமராஜ் பூலாங்குரிச்சி மகாநாட்டில் பேசியது பெரும் தவறு என்று பல ஆதாரங்களுடன் சுட்டிக் காட்டினர்.

தலைவர் முடிவுரைக்குப்பின் கஸ்தூரிபா ஆதாரப் பாடசாலை மாணவிகள் ஆசிரியர்கள் தேசீய கீதத்துடன் கூட்டம் இரவு 10-மணிக்கு இனிது கலைந்தது.

வேதாரண்யம், 22—11—48. } வே. அப்புக்குட்டி, நிர்வாகி கஸ்தூரிபா ஆதாரப் பாடசாலை.

## ஊழியர்களின் இன்றையக் கடமை என்ன?

:0:

தமிழ்நாடு காங்கிரஸ் ஊழியர்களின் 2.வது மகாநாடு கூட்டவேண்டுமென திரு அருள்மரிநாதன் பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கும் செய்திகளை கண்ணுற்றேன். அவைகள் போற்றத்தகுந்தவை எனினும் இன்று ஸ்தாபனங்களில் பட்டம், பதவி மோகங்கொண்டு, தன்னலமே தன் வாழக்கையாகக்கொண்டு, புகழைப் பிரதானமாகக் கொண்டு வீற்றிருக்கும் அன்பர்களை ஒழித்துக்கட்டி ஒவ்வொரு ஸ்தாபனங்களிலும் உண்மையும், உணர்வும் தியாக மாண்பும், முற்போக்கும் கொண்ட தேசபக்தர்களை பதவி ஏற்கச் செய்ய ஊழியர்கள் முனையவேண்டுவது முதற்கடமை அக்கடமை செவ்வனே நிறைவேறில் நாட்டிலுள்ள அராஜகம் பலாத்காரம் தானே ஒழிந்துவிடுமெனதிருப்பத்தூர் தாலூகா காங்கிரஸ் நிர்வாக கமிட்டி அங்கத்தினர் திரு ஏ, அருணாசலன் ஊழியர்களுக்குயோசனை கூறுகிறார்.

# குளிர் கால தாக்குதலுக்கு பாகிஸ்தான் திட்டம்.

## பதான் கோட் — ஜம்மு ரோடை நாசம் செய்ய சதி.

## இந்தியா பாகிஸ்தான்மேல் யுத்தம் தொடுக்கும்?

புது டில்லியில் ஏற்பட்டிருக்கும் புதுநிலைமையை உத்தேசித்து பிரதம மந்திரி பண்டித ஜவஹர்லால் நேரு சென்றவாரம் புது டில்லி திரும்பினர். அவர் பாகிஸ்தானுக்கு கடுமையான எச்சரிக்கைவிடுத்து "பாகிஸ்தான் ஜம்மு யுத்த அரங்கத்தில் ஸியால்கோட் மூலம் ராணுவ நடவடிக்கை யெடுத்து காஷ்மீர் யுத்தத்தில் பாகிஸ்தான் விமானப் படையைஉபயோகித்தால் அந்த நடவடிக்கையை இந்தியாவின் மேல் யுத்தம் தொடுத்ததாகக் கருதி பதில் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று தெரியப்படுத்துவார் என்றுநிச்சயமாக நம்பப்படுகிறது.

புது டில்லியிலிருந்து கிடைத்திருக்கும் ஒரு அந்தரங்க செய்தி கூறுவதாவது:— பதான் கோட்-ஜம்மு புதிய பாதையை துண்டித்து காஷ்மீரத்தில் சண்டையிடும் துருப்புகளை இந்தியாவிலிருந்து பிரித்துவிடும் எண்ணத்தோடு தாக்குதல் நடத்த பாகிஸ்தான் மும்முரமாய் முஸ்தீபு செய்வதாகத் தெரிகிறது. இத்துடன், நௌஷேரா, சகோதி, தில்வால்பிரதேசத்தில் குளிர்கால தாக்குதல் நடத்த திட்டமிடுவதாகத் தெரிகிறது. சமீபத்தில் பாகிஸ்தான் விமானப் படையின் விமானங்கள் இந்திய பிரதேசத்தில் வேவு பார்க்க பறந்தன. சில விடங்களில் இவ்விமானங்கள் ரேடியோமூலம் பாகிஸ்தான் பீரங்கிப்படைக்கு உதவின. இந்நடவடிக்கைகளின் மூலம் பாகிஸ்தான் தன் விமானப்படையை சரியான சமயத்தில் உபயோகிக்க திட்டமிட்டிருப்பதாய் நிச்சயமாகத் தெரிகிறது.

### வகுப்பு வாதமும், பசு பலியும்.

#### ஜமீயத்துல் உலமா மகாநாட்டில் ஸ்ரீ ராம் குலாம்; ஸ்ரீ சேவ் ஸருப்சிங் பேச்சு.

அம்ரோஹி, நவ. 4

நேற்று இரவு அம்ரோஹி ஜமீயத்துல் உலமா மகாநாட்டில் பேசும்போது ஸ்ரீராம் குலாம் 'மதமும், மனிதத்தன்மையும்' என்பதைப்பற்றி கூறியதாவது:-

கடந்த நாட்களில் நடந்த கொலை, கொள்ளை முதலியவை, குர்ஆன், கிரந்தம், கீதை முதலியவைகளை பொய்ப்பிக்கச் செய்யப்பட்ட முயற்சி எனலாம். பிரிவினைக்கு முன் முஸல்மான் வகுப்பு வாதியாகயிருந்தான். ஆனல் பிரிவினைக்குப்பின் ஹிந்து வகுப்பு வாதியாகிவிட்டான். இவ்வகுப்புவாதம் காந்திஜியையும் கொன்று பலிகொண்டது. முஸல்மான்கள் பொறுமையுடனிருந்தால் இவ்வகுப்புவாதத்தை தீர்த்துக் கட்டிவிடமுடியும்.

"பக்ரீத் சமயத்தில் குர்பானி (பலி) நடத்தக் கூடாது என்று தடைவிதித்து சர்க்கார் பெரிய தவறு செய்தது. 1922-ம் வருஷம் குர்பானி நடத்தப்படவில்லை. 1948-லும் (குர்பானி) பலி கொடுக்கும் சடங்கு நடைபெறவில்லை. ஆனல் முன்னைய நிறுத்தம் முஸல்மான்கள் சந்தோஷமாய் தாமேசெய்தது. பின்னையது சர்க்காரின் தடைச் சட்டத்தாலும் கட்டாயத்தின் பேரிலும் நடந்தது. பசுபலி ஒழியவேண்டும். இதில் யாதொரு வருத்தமும் இல்லை. ஆனல் இவ்விதமா கட்டாயத்தின் பேரில் ஒழிவதாயிருந்தால் அது வருந்தவேண்டியதே. அதை நானே ஏற்றுக்கொள்ளவும் முடியாதது." என்று ஸ்ரீ சேவ்ஸருப்சிங் சௌதரி பேசினர்.

அவர் தொடர்ந்து பேசுகையில், "ஹிந்துக்கள் நடந்துகொள்ளும் முறையைப் பார்த்தால் ஜின்ன சொல்லிவந்தது உண்மைதான் என்பது நிச்சயமாகிறது" என்று கூறினர்.

## அரசியலிலிருந்து ராஜன் பாபு விலகுவார்.

பாபு ராஜேந்திர பிரஸாத் சமீபத்தில் தீவிர அரசியலிலிருந்து விலகி பாக்கியுள்ள தன் வாழ் நாளை மஹாத்மா காந்திஜி விட்டுச்சென்ற வேலையில் கழிக்க விரும்புகிருர். என்று 'அமிர்தபஜார்' பத்திரிகையின் பாட்ன நிருபர் எழுதுகிருர்.

இந்திய அரசியல் நிர்ணயசபையின் சென்றகூட்டத்திற்குப் பிறகு ராஜன் பாபுவின் எதிர் காலத்தைக் குறித்து பலவிதமான வதந்திகள் உலவின. இந்திய மந்திரிசபையை அமைக்க பாபு ராஜேந்திர பிரஸாத் கேட்டுக்கொள்ளப்படுவாரென்று சில வட்டாரங்களில் சொல்லப்பட்டது. இந்திய தேசிய காங்கிரஸ் மஹா சபையின் தலைவராகவே நீடித்திருப்பாரென்று பலர் அபிப்பிராயப்பட்டார்கள். ஆனல் மஹாத்மா காந்திஜியின் மறைவால் ஏற்பட்டிருக்கும் இடைவெளியை பூர்த்தி செய்வாரென்று இப்பொழுது தெரிகிறது. மேலும் தனது கடைசி நாட்களில் காந்திஜி காங்கிரஸுடன் வைத்திருந்த அளவுக்கே ராஜன் பாபுவும் தொடர்பு வைத்துக்கொள்வாரென்று சொல்லப்படுகிறது.

# குருட்டு வழிகாட்டிகள்.

ஒரு ஊரில் ஒரு குருட்டுக்குதிரை யிருந்தது தினமும் பக்கத்திலுள்ள புல் தரையில் போய் மேயும். ஏரியில் ஜலத்தைக் குடிக்கும். வந்து படுத்துக்கொள்ளும். ஒரு நாள் வழி தவறி காட்டுக்குள் சென்றுவிட்டது. மேலும் நடந்தால் ஏதாவது பள்ளத்தில் விழ வேண்டியிருக்குமென்று பயந்து ஒரு புதரில் நின்றுகொண்டிருந்தது.

அதிர்ஷ்ட வசமாக அங்கு ஒரு ஆந்தை உட்கார்ந்திருந்தது. குதிரையின் கஷ்டத்தைப் பார்த்த ஆந்தை உதவிசெய்ய முன் வந்தது. குதிரையும் ஆந்தையைத் தன் வழிகாட்டியாக நன்றியுடன் ஏற்றுக்கொண்டது.

இருட்டில் ஆந்தைக்கு நன்றாகக் கண் தெரியும் பறந்துவந்து குதிரையின் முதுகில் உட்கார்ந்த ஆந்தை புதர்கள், வரிகள், பள்ளங்கள், பாறைகளில் விழுந்து விடாமல் குதிரையைக் காப்பாற்றி விடிவதற்குள் காட்டிற்கு வெளியே சாலையில் கொண்டுவந்து சேர்த்துவிட்டது.

இப்பேர்ப்பட்ட உபகாரியை இழக்க யார்தான் சம்மதிப்பார்கள்? தன்னுடைய வழிகாட்டி தன்னை விட்டுப் பிரிவதை குதிரை விரும்பவில்லை. ஆகையால் பகல் நேரத்திலும் தனக்கு வழிகாட்டியாக இருக்கும்படி ஆந்தையை வேண்டிக்கொண்டது.

குதிரையின் வேண்டுகோளுக்கு ஆந்தையும் இணங்கி திரும்பவும் பறந்து வந்து பெரு மிதத்துடன் குதிரையின் முதுகில் உட்கார்ந்துகொண்டது. சற்று இளைப்பாறிய பிறகு இருவரும் சேர்ந்து பிரயாணத்தை நடத்தினார்கள். சிறிது நேரங்கழித்து சூரியன் உதயமானான். ஆந்தையின் கண்கள் இருளவாரம்பித்தன. போகப்போக சூரியப் பிரகாசம் ஆந்தையின் கண்களை பொட்டையாக்கிவிட்டது. அதன் கண்களுக்கு ஒன்றுமே புலப்படவில்லை.

குதிரைக்கு வழிகாட்டியாக இருக்கும் யோக்கியதை இழந்துவிட்ட போதிலும் தன்னுடைய கையாலாகாதனத்தைக் காட்டிக்கொள்ள ஆந்தை விரும்பவில்லை. அதை கௌரவக் குறைவென்று நினைத்து குதிரைக்கு மேலும் வழிகாட்டி நடத்திக் கொண்டுபோக நினைத்தது. இடது பக்கத்தில் ஆழமான பெரும் பள்ளத்தாக்குள்ள மலைவழியே குதிரை போய்க்கொண்டிருந்தது. அப்போது ஆந்தை "நண்பரே! நில்லும்! வலதுபுரம் ஒரு அடி நகர்ந்தாலும் ஆழமானஏரியில் விழுந்துவிடுவீர்" என்றுஎச்சரித்தது தன் வழிகாட்டியின் எச்சரிக்கையைக் கேட்டு திடுக்கிட்ட குதிரை இடது புரம் தாண்டிக் குதித்து படுபாதாளத்தில் விழுந்து இறந்து போய்விட்டது.

இருளடைந்த ஆங்கில ஆட்சியில் லீக் தலைவர்களான ஆந்தைகள் மதக் கல்வியோ, அரசியல் அறிவோ இல்லாமலிருந்த முஸ்லிம் லீகர் குருட்டுக்குதிரைக்கு வழிகாட்டினார்கள். 1947 ஆகஸ்ட் 15-ல் உதயமான சுதந்திர சூரியன் அவர்களுடைய கண்களை பொட்டையாக்கிவிட்டது. திகைப்புற்று என்ன செய்வதென்று புரியாமல் சில ஆந்தைகள் பாகிஸ்தான் இருளை நோக்கி பறந்தன சில வெளியில் தலைகாட்டாமல் பதுங்கிவிட்டன. இன்னும் சில விஸ்வாஸப் பல்லவியைப் பாடத் தொடங்கியிருக்கின்றனர்.

இருந்தாலும் தங்கள் கையாலாகாத் தனத்தைக் காட்டிக்கொள்ள விரும்பாத சில ஆந்தைகள் லீகர்களை அபாயகரமான பாதையில் இழுத்துச்செல்லப் பார்க்கின்றன.

லீக் தலைவர்களின் தவறான போக்கால் இன்று இந்திய முஸ்லிம் சமூகம் பயங்கரப் படுகுழியின் ஓரத்தில் நிற்கின்றது. லீக் ஆந்தைகளின் பேச்சைக் கேட்டு ஒரு அடியெடுத்து வைத்தாலும் சமூகம் அழிய வேண்டியிருக்குமென்று எச்சரிப்பதுஉண்மை முஸ்லிம்களின் கடமை. வெள்ளை ஆட்சியின் இருட்டில் வளர்ந்த லீக் ஆந்தைகளுக்கு முஸ்லிம் சமூக நலனில் இம்மியும் அக்கரை யிருந்தால் முக்காடிட்டு மூலையில் உட்காருவதே சரி. இனியும் உண்மைக்கு மாறாகப் பேசி முஸ்லிம்களுக்கு ஆசைகாட்டி தவறான வழியில் இழுத்துச் சென்று அபாயத்துக் குள்ளாக்க வேண்டாமென்று எச்சரிக்கிறோம்.


## "ஆஸாத்"

( தமிழ் தேசீய வாரப் பத்திரிகை. )

உங்கள் ஊர் ஏஜெண்டிடம் கேளுங்கள், உங்கள் ஊரில் "ஆஸாத்" ஏஜென்ஸி இல்லாமல் இருந்தால் ஏஜென்ஸி எடுக்கும்படி அவருக்கு யோசனை கூறுங்கள். இது உங்கள் தேசியக் கடமை. "ஆஸாத்" சந்தாதாரர்களாக ரூ. 6/- (ஆறு) மணியார்டர் மூலம் அனுப்பி உடனே பதிவு செய்துகொள்ளுங்கள்.

மானேஜர், ஆஸாத், குடந்தை.

# தமிழகமும் திராவிடரும்

பிரிட்டிஷார் காலத்தில் இந்தியாவில் எத்தனையோ கட்சிகளிருந்தன. அவற்றை (1) உரிமைகளுக்காக அன்னிய ஆதிக்கத்தை எதிர்த்துப்போராடி மக்களின் ஆதரவுபெற்று வளர்ச்சியடையந்த முற்போக்கு கட்சிகள் (2) மக்கள் ஆதரவு இல்லாமல் அன்னிய ஆதிக்கத்தின் ஆதரவால் வளர்க்கப்பட்டு வந்த பிற்போக்கு கட்சிகள் என இரண்டுவகையாக பிரிக்கலாம்.

வேண்டும்போது தட்டிக்கொடுத்து வேலை வாங்கிக்கொள்வதும் பிறகு காலைவாரி விடுவதும் ஆங்கிலேயரின் தொன்றுதொட்ட வழக்கம். அதையொட்டியே அவர்கள் இந்தியாவிலும் நடந்து கொண்டார்கள். 'சாட்சியக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுவதுமேல்' என்ற கொள்கையை அனுசரித்தார்கள். அதனால் சூரியன் அஸ்தமிக்காத பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் இந்தியாவிலா அஸ்தமிக்கப் போகின்றது? என்று நம்பியிருந்தவர்களை அந்தரத்தில் விட்டு விட்டு ஆங்கிலேயர் இந்தியாவை விட்டு வெளியேறிவிட்டனர்.

போனதுதான் போனார்களே! அவர்கள் பாட்டிலே போயிருக்கக்கூடாதா? காங்கிரஸ்காரர்களிடம் நாட்டை வேறு ஒப்படைத்து விட்டுப் போகவேண்டுமா! நாடு எக்கேடு கெட்டாலும் அதைப் பற்றி கொஞ்சமும் கவலையின்றி தங்களுடன் ஒத்துழைத்து வந்த தாஸானுதாஸர்களை அழைத்து ஒரு வார்த்தையாகிலும் கேட்டிருக்கக்கூடாதா?

ஆங்கிலேயரின் இந்த நன்றிகெட்ட செய்கை அவர்களை நம்பியிருந்தவர்களுக்கு சாவுமணியாகவே இருந்தது. பொதுவாழ்வில் தாங்கள் அஸ்தமித்துப் போகாமல் இருக்க என்னசெய்வதென்ற கவலை அவர்களைவாட்ட ஆரம்பித்தது. வேரறுத்துப்போன தங்கள் கட்சிகள் மாண்டுமடிந்து போகாமல் இருக்க வேண்டிய தவசியமென்பதை உணர்ந்தார்கள். பழைய ரூபத்தில் இனி வெளியில் தலைகாட்ட முடியாதென்பதும் அவர்களுக்கு நன்றாகத்தெரியும். எனவே கட்சிகளுக்கு புதியபெயர்கள் வைக்கப்பட்டன; புதிய கோஷங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. உளுத்துப் போன பழைய சரக்கை புதிய பெயருடன் விற்க ஆரம்பித்துவிட்டனர். பிரிட்டிஷ் ஆதரவின்கீழ் ஜீவித்திருந்த கட்சிகள் இன்று இவ்விதமாக உயிருக்கு போராடிக் கொண்டிருக்கின்றன.

இன்று தமிழ் நாட்டில் ஒரு சில இடங்களில் புதியநடை புதியஉடை, புதிய கோஷங்கள் திராவிடக் கழகம் என்ற புதிய பெயருடன் பழைய பேர்வழிகள் புதிய கட்சியொன்றை ஆரம்பித்திருக்கின்றனர். இவர்கள் இதற்கு முன்னால் எடுத்த அத்தனை ஜென்மங்களும் அவ்வப்போது அன்னியர்களுக்கு அவர்கள் செய்துவந்த உதவியும் தமிழர்களுக்குத் தெரியும். "அன்னியஆட்சி ஒழிக!" என்று கோஷித்தவர்களை ஒழிப்பதற்கு அன்னியர்களுடன் சேர்ந்து சூழ்ச்சி செய்தவர்களும் ஏகாதிபத்திய சுரண்டலுக்கு முடிவு கட்டப் போராடியவர்களை முடிக்க முயன்றவர்களும் இன்று வடநாட்டு ஆதிக்கம் ஒழிக! வடநாட்டு சுரண்டல் ஒழிக!" என்று கூச்சல் போடுகின்றனர். ஹிந்துஸ்தானியால் தமிழுக்கு ஆபத்தாம்! வடநாட்டு ஆதிக்கம் ஏற்பட்டுவிடுமாம்! ஆனால் ஆங்கிலம் வேண்டுமாம்! மேல்நாட்டு ஆதிக்கம் ஏற்படவேண்டுமென்பதுத அவர்களுடைய லட்சியமா? வென்பது தெரியவில்லை. திராவிட இன உணர்ச்சியால் தமிழனை மயக்கிவிட முடியாதென்பது திண்ணம். வெள்ளையர்களிருந்தவரை இந்தவீரர்களின் திராவிடரத்தம் சில்லிட்டுப்போயிருந்ததை தமிழர்கள் மறந்துவிடவில்லை.

தனிப் பண்புடையவன் தமிழன். அவனுக்கு வடநாடு, தென்னாடு, ஆரியன், திராவிடன் என்ற பாகுபாடு இல்லை. இன வித்தியாசங்கள், பூகோள எல்லைக்கோடுகளால் தமிழனைக் கட்டுப்படுத்த முடியாது. இன்று தமிழன் பெயரால் தமிழகத்துக்கு தீங்கிழைக்க படுகிறது. தமிழன் வெறுப்பும் குறுகிய மனப்பான்மையும் உள்ளவனல்ல.

குளத்தில் தாமரையுடன் கூடவே தவளைகளும் இருக்கும் இரண்டுக்கும் குளத்தின் ஜலமே ஆதாரம். தாமரையிலைகளின் மீதே தவளைகள் தத்திக்குதித்து வளரினும் தாமரைக்கும்தவளைக்கும்சம்பந்தமுண்டா? தவளையைக்கண்டு தாமரைமலருமா? தாமரைமலர சூரியன் வேண்டும். தவளைபடும் வயிற்றெரிச்சலுக்காக தாமரை தன் குணத்தை மாற்றிக்கொள்ள முடியாது. தமிழன் தாமரை போன்றவன். அன்பே அவனுடைய உயர்நிலை. அன்பினால்மட்டுமே மலருவான். வெறுப்பு, துவேஷம் அவனை அணுகமுடியாது. ஆகையால் தமிழகத்தின் தனிப்பெரும் சிறப்புக்கு தீங்கிழைக்கும் வேலைகளை விட்டு நாட்டில் நிர்மாண விஷயங்களில் தங்கள் சக்தியை ஈடுபடுத்துமாறு திராவிடக்கழகத் தோழர்களை அழைக்கிறோம்.

ஏஜெண்டுகள் இல்லாத இடங்களில் எமது
"ஆஸாத்" விற்பனை செய்ய
**ஏஜெண்டுகள் தேவை.**

## பாகிஸ்தானில் அகதிகள் அவதி.

ஒரு வருஷமாய் லாஹூரில் கிடந்து அவதிப்பட்டுவந்த பல லட்சம் கிழக்குபஞ்சாப் முஸ்லிம் அகதிகளை குடியேற்றுவதற்காக பாகிஸ்தான் சர்க்கார் சிந்துவுக்கு கொண்டுபோயிருக்கிறது. பஞ்சாபிகள் குடியேற்றத்தால் தங்கள் உரிமைகள் பாதிக்கப்படுவதாக சிந்து முஸ்லிம்கள் எதிர்க்கின்றனர். எதிர்ப்புக்கு சிந்து மந்திரிகளில் சிலரின் மறைமுகமான ஆதரவும் இருந்துவருகிறது.

அகதிகள் விஷயத்தில் சிந்து முஸ்லிம்களின் போக்கைக் கண்டித்து சிந்து கவர்னர் மிஸ்டர் தீன் முஹம்மது வெளியிட்டிருக்கும் அறிக்கையில் "சிந்துவிலுள்ள பலதரப்பட்ட மக்களிடையே பிளவு, அமைதியின்மை உண்டாக்கக்கூடிய எந்தக் கிளர்ச்சியையும் அதை யார் ஆரம்பித்தாலும் சகிக்க முடியாதென்று என்னுடைய சர்க்கார் அடிக்கடி அறிவித்திருக்கிறது. எந்த மாகாணத்தைச் சேர்ந்தவர்களாயினும் எல்லா மு லிம்களுக்காகவுமே வாங்கப்பட்ட பாகிஸ்தானில் மாகாண வேற்றுமைக்கு இடமில்லை. மாகாணப் பித்துக்கு இலக்கா யிருப்பவர்கள் சர்க்கார் உத்தியோகஸ்தர்களாயினும் சாதாரண ஜனங்களாயினும் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்" என்று எச்சரித்திருக்கிறார்.

பஞ்சாபி முஸ்லி கள் குடியேறுவதால், சிந்து முஸ்லிம்களின் உரிமைகள் பாதிக்கப்படுமென்பது உண்மையே. ஆயினும் அந்த குற்றத்தை கிழக்கு பஞ்சாப் முஸ்லிம்கள் மீது சுமத்துவது சரியல்ல. பாகி தானுக்காக எல்லாவற்றையும் இழந்துவிட்டு ஓடிவந்த பல லட்சம் கிழக்கு பஞ்சாப் முஸ்லிம்களை மேற்கு பஞ்சாபியர்களும் வரவேற்கவில்லை. சிந்து முஸ்லிம்களும் எதிர்க்கின்றனர். பாகிஸ்தானின் வேறு எந்த மாகாணத்திலும் அவர்களுக்கு இடமில்லை. மாகாண பித்தினால் பிரதேச முஸ்லிம்கள் பரதவிக்கும் கிழக்கு பஞ்சாபிகளை மனித ஒழுக்கத்துக்கு மாறாக நடத்துகின்றனர்.

சிந்திகள் தங்கள் உரிமைகளையும், நாகரீகம், பழக்க வழக்கங்களையும் காப்பாற்ற முயற்சிப்பது அறிவிலித்தனமாகும். பத்துகோடி முஸ்லிம்களுக்காக வாங்கப்பட்ட பாகிஸ்தானில் ஒரு மா ாண மு லிம்கள், இன்னொரு மாகாண முஸ்லிம்களின் உரிமைகளை பறித்துவிடுவர், பழக்க வழக்கங்களை கெடுத்துவிடுவர் என்று சொல்லுவது ஒரு காலத்தில் போட்ட கூச்சல்களுக்கும் முஸ்லிம்கள் அனைவரும் தனி நாகரீகத்தினர் என்று பேசியதற்கும் மாறானது. எனவே ஒழுக்கத்தை இழக்காமல் சிந்திகள் அவதியுறும் அகதிகளுடன் அன்பு, சமத்துவத்துடன் நடந்துகொள்ளவேண்டியதவசியம்

## ஆத்திரமடைந்த லீகர்கள் பாக்-பர்மிட் ஆபீஸைத்தாக்கினர்.

பம்பாயிலுள்ள பாகிஸ்தான் பர்மிட் ஆபீஸ் அதிகாரிகள் பாகிஸ்தானுக்கு போகும் முஸ்லிம்களிடம் லஞ்சம் வாங்காமல் அனுமதிசீட்டு கொடுப்பதில்லையென்றும் ஏழை முஸ்லிம்களை தொந்தரவு செய்கிறார்களென்றும் ஆத்திரமடைந்த முஸ்லிம் லீகர்கள் பாகிஸ்தான்பர்மிட் ஆபீஸையேதாக்கி ஜன்னல்களையெல்லாம் உடைத்து உள்ளே புகுந்து அதிகாரிகளை செம்மையாகப் புடைத்து, ரிகார்டுகளை கிழித்து எறிந்து விட்டனர். பிறகு தாக்கிய லீக்கர்கள் நீண்டதொரு ஆட்சேபனைக் குறிப்பையும் பாகிஸ்தான் சர்க்காருக்கு அனுப்பியிருக்கின்றனர்.

பம்பாய் தாஜ்மஹால் ஹோட்டலில் தங்கியிருந்த பாகிஸ்தான் அதிகாரிகள் ஹோட்டலிலிருந்து வெளியேற்றப் பட்டிருப்பதாகவும் அவர்களுடைய காரியாலயம் நேபியன்-ஸி ரோட்டில் மாற்றப்பட்டிருப்பதாகவும் தெரிய வருகிறது. தாஜ்மஹால் ஹோட்டல் நிர்வாகிகளுக்கு சிலதினங்களாகவே ஆட்சேபனையிருந்து வந்ததாக சொல்லப்படுகிறது.

ஃ ஃ ஃ

## ஒரே மாகாணமாக்க பாக்-மத்திய சர்க்கார் யோசனை.

பாகிஸ்தான் சர்க்கார் பாகிஸ்தான் பிரதேசம் பூராவையும் ஒரே மாகாணமாக்க யோசித்து வருவதாகத்தெரிகிறது. காலஞ்சென்ற மிஸ்டர் ஜின்னாவின் பொருளாதார ஆலோசகர் ஸர்வால்டர் மாங்க்டன் இந்த யோசனையை வெளியிட்டார். இந்த யோசனைப் படி பாகிஸ்தான் நிர்வாகச் செலவுகளில் பெருந்தொகையை மிச்சப்படுத்த முடியுமென்று மிஸ்டர் ஜின்னாவுக்கு அவர் எடுத்துக்காட்டியிருந்தார். மிஸ்டர் ஜின்னாவும் அதைஆதரித்தாராயினும் மாகாண மந்திரி சபைகள் அதை யெதிர்த்ததால் பிரச்னையைக் குறித்த பரிசீலனை ஒத்திப் போடப்பட்டிருந்தது.

பாகிஸ்தானை பொருளாதாரத்துறையில் பலப்படுத்துவதற்காக பாகிஸ்தான் மத்திய அரசாங்க முக்கியஸ்தர்கள் மீண்டும் அந்த யோசனையை வற்புறுத்த ஆரம்பித்திருக்கின்றனர். இந்தியாவில் 35 ஜில்லாக்களைக்கொண்ட ஐக்கிய மாகாணம் ஒரே மாகாண நிர்வாகத்தின்கீழ் சிறந்த முறையில் நிர்வகிக்கப்படுகையில் பாகிஸ்தான்முழுவதிலுமுள்ள 40 ஜில்லாக்களையும் ஒரே மாகாணத்தின்கீழ் கொண்டு வந்து சிறந்த முறையில் நிர்வகிக்க முடியுமென்று அவர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். ஆயினும் இந்தயோசனை பதவிப் பித்தர்களுக்கு பெருத்த அடியா இருக்குமென்பதில் சந்தேகமில்லை.

# சமூக வாழ்வு

சென்ற வாரத் தொடர்ச்சி.

## மொழி.

வட இந்தியாவில் தற்காலம் எல்லோரும் பேசி விளங்கிக்கொள்ளுகிற மொழி, எப்பெயரால் வழங்கினாலும் சரி, அது ஹிந்து முஸ்லிம்களின் கூட்டு முயற்சியின் விளைவாக இல்லாவிட்டாலும் சரி, அக்கூட்டு முயற்சியால் பெரிதும் பாதிக்கப்பட்டிருக்கிறதென்பதில் ஐயமில்லை. சமஸ்கிருதம் பேச்சு வழக்கொழிந்த பிறகு அதன் வழித்தோன்றல்களாகிப் பேச்சு வழக்கில் விளங்கிய பிராகிருதம், பாலி முதலிய மொழிகளிலிருந்தும், இது தோன்றியதாகும். முஸ்லிம் படையெடுப்பாளர், நாடு பிடித்தவர்களுடைய மொழிகள் அவர்கள் எந்த இனத்தைச் சேர்ந்தவர்களோ அதையொட்டி வேறுபட்டிருந்தன. அம்மொழிகள், அராபியாலும் அதிகமாகப் பாரசீகத்தாலும் பாதிக்கப்பட்டிருந்தன. முஸ்லிம் ஆட்சிக் காலத்தில் பாரசீகம் அரசியல் மொழியாயிற்று. ஹிந்துக்களால்: அதுவும் குறிப்பாக அரசாங்கத்தாரோடு பெரிதும் தொடர்புடையவர்களால் அது பழக்கப்பட்டுவந்தது. ஆனால் அது பொதுமக்களின் மொழி ஆக முடியவில்லை; ஆகவும் முடியாது. இந்திய முஸல்மான்களில் பெரும்பகுதியினர் பிறப்பில் இந்தியரானதால் பாரசீகம் முஸல்மான்களின் மொழியாகவில்லை. ஒரு பக்கம் இந்தியப் பொதுமக்களான ஹிந்து முஸ்லிம்கள்; மறு பக்கம் அன்னியரான முஸ்லிம் மன்னர்கள். இவர்களிடையே பொதுவான மொழியொன்று வேண்டியதாயிற்று. ஆகவே இருபாலாரும் இம்மொழியை நன்கு வளரச் செய்தனர். அமீர்குஸ்ரோ காலத்திலேயே இது அவரால் பாட்டுக்கள் பாடுவதற்குகந்த செம்மொழியாகிவிட்டது. அவரது பாடல்கள் இன்றும் பிரசித்தமாக இருக்கின்றன. உருது, ஹிந்தி இரண்டும் தனிமொழிகளாகக் கருதப்படுமாயின் இரண்டின் இலக்கியங்களுக்கும் ஹிந்து முஸ்லிம் இருவகுப்பாரும் பெரிதும் உதவியிருக்கின்றனர் என்பதை இவ்விரு மொழியபிமானிகளும் ஒப்புக்கொள்கின்றனர் ஹிந்துக்கள் தங்களது சமய ஆர்வத்தை வடமொழி இலக்கியத்திலிருந்து பெற்றார்கள்; முஸ்லிம்கள் அரபி, பாரசீக நூல்களிலிருந்து பெற்றனர். ஆகையால் பாஷையின் உடலமைப்பை அப்படியே விட்டுவிட்டு, சமஸ்கிருத, அரபி, பாரசீகச் சொற்களைக் கையாண்டிருப்பார்கள் என்பது எதிர்பார்க்கத் தகுந்ததே. ஹிந்தி, உருது எனும் இரண்டு மொழிகளுக்கும் உடலமைப்பு ஒன்றேயாம். சொற்கள் சம்பந்தப்பட்டவரை சிறிது வேறுபாடு இருக்கிறது. ஆகவே வட இந்தியாவில் ஹிந்து முஸ்லிம்கள் பேசியறிகின்ற மொழி, ஒன்றுதான். படித்தவர்கள் அவர்களுடைய படிப்புக்கும் பயிற்சிக்கும் தகுந்தபடி அதில் சமஸ்கிருத பாரசீக, அரபிச் சொற்களை உபயோகப்படுத்துவார்கள். ஹிந்து முஸ்லிம்களுக்குப் பொதுச்சொத்தென்று நியாயமாகப் பாராட்டக்கூடிய பாராட்டவேண்டிய இந்த மொழியில் தகராறு கிளம்பியிருப்பது துர்பாக்கியமானதே.

அமீர் குஸ்ரோ காலத்திலிருந்து இன்றுவரை இந்த மொழியின் வளர்ச்சிக்கு முஸல்மான்களுடைய அரிய சேவையை ஹிந்தி ஆதரவாளர்கள் மறக்கவோ புறக்கணிக்வோ முடியாது. பண்டித ராம நரேஷ் திரிபாடியவர்களால் தொகுக்கப்பட்ட கபிதா கௌமுதி என்ற பாடல் தொகுதிகளை ஒருவர் கண்ணுற்றால் போதும். அவ்வக்காலங்களில் மகம்மதிய கவிகள் இயற்றிய பாடல்களை அவர் தொகுத்திருக்கின்றார். ஹிந்தி எழுத்தாளர்கள் ஹிந்தியென்று கூறும் அந்த பாஷையை மாத்திரம் அவர்கள் கையாளவில்லை அவர்களுடைய பக்திரஸப் பாடல்களின் தன்மையும் ஹிந்து மயமாக இருக்கின்றது. ஹிந்துக்களுடைய பாடல்களின் அதிதேவதைகள் முக்கியமாக சீதாராமனும் ராதாகிருஷ்ணனுமாவர். கோரகபுரம் கீதா பதிப்பகம் வெளியிட்ட பக்தி பாடற் புத்தகங்கள் ஐந்தில் ஒன்று, முஸ்லிம் பக்தர்கள் மட்டும் பாடிய பாடல்கள் கொண்டதாக அடங்கியிருக்கின்றது. எந்தப் பக்தனும் அவைகளால் பரவசமடையாமலிருக்கமுடியாது. ரஹிமானுடைய தோஹாக்கள், கிரீவருடைய சவைய்யாக்களைப்போல வட இந்தியா முழுவதும் ஒவ்வொரு வீட்டிலும் காணப்படும். அறிவும் அனுபவமும் செறிந்துள்ளனவாகையால் அவை போற்றப்படுகின்றன. கபீர் சிறந்த பக்தர், ஆத்மஞானி என்பதை ஏற்கனவே தெரிவித்துள்ளோம்; எட்டாக்கையிலிருந்த உபநிஷத்துகள், வேதாந்தங்களுடைய உயர்ந்த போதனைகளையும் தத்துவங்களையும் சாதாரண கிராமவாசிக்கும் விளங்கும் வண்ணம் கொண்டுவந்தார். பொதுஜனங்கள் எளிதில் உட்புக முடியாத மடங்கள் காடுகள், யோகிகளுடைய ஆசிரமங்கள் முதலியவைகளிலிருந்து ஏழைக்குடியானவனுடையபட்டிக்காட்டுக்கும். குடிசைக்கும் அவைகளை கொண்டுவந்து சேர்த்தார். வட இந்தியாவில் துளசிதாஸர் பக்தி சாதனத்தைப் பரப்பியதுபோல, வங்காளம் ஒரிஸாவில் மஹாப்பிரபு சைதன்யர் பக்தி சாதனத்தைப் பரப்பியதுபோல, வட இந்தியாவில் கபீர் யோக சாதனத்தையும் வேதாந்த சாஸ்திரத்தையும் பரப்ப முயன்றார்.

அதுபோல உருது இலக்கியத்திற்கு ஹிந்துக்கள் செய்த சேவையை யார் மறுக்கமுடியும்? இன்றும் கூட உருதுமொழியிலும் அதன் இலக்கியத்திலும் ஈடுபட்டு அதில் கண்ணுங்கருத்துமா யிருப்பவர்களிற் பெருவாரியான பேர் ஹிந்துக்களில்லை என்று யார் கூறமுடியும்? ஹிந்து முஸ்லிம் தகராறுகளுக்கு மொழி பிரச்னையைக் காரணமாக்குவது சரித்திர உண்மைகளுக்கு மாறுபடுவதோடல்லாமல் தினசரி வாழ்வுச் சம்பவங்களையும் மறுப்பதாகும்.

தன்னுடைய வளர்ச்சிக்கும் வளத்துக்கும் ஹிந்தி அல்லது உருது மாத்திரம் மஹமதிய மன்னர்களுக்குக் கடமைப்பட்டிருக்கவில்லை. இதர மாகாண மொழிகளும் ஆதரவு பெற்றன. அவை முஸ்லிம் மன்னர்களுக்குப் பெரிதும் கடமைப்பட்டுள்ளன. ‘வடக்கில் ஹிந்தி, மேற்கில் மராத்தி, கிழக்கில் வங்காளம் முதலியன சிறந்த இலக்கிய மொழிகளாயின. அவ்வாருக்கிய பெருமையில் ஹிந்து முஸ்லிம் இருபாலாருக்கும் பங்கு உண்டு. இதற்கெல்லாம் மேலாக, புதியதொரு மொழியமையும்படி நேர்ந்தது. முஸ்லிம் தனது துருக்கி பாரசீக மொழிகளை விடுத்து ஹிந்துமொழியை விடுத்துக்கொள்கிறான். தனது சிற்பம், ஓவியக் கலைகளைச் சிறிது மாற்றிக்கொள்வது போலத் தனது மொழிகளைச் சிறிது மாற்றி உருது என்னும் புதிய மொழியொன்றினை அமைக்கிறான். மேலும் முஸல்மான்களும் ஹிந்துக்களும் அதைத் தங்களதாகக் கொள்கிறார்கள். இதன் பின்னர் அதிசயமான இயற்கை நிகழ்ந்தது. இலக்கியத்தில் ஒரு துறைக்கு ஹிந்தியும் இன்னொரு துறைக்கு உருதுவும் உபயோகப்பட்டு வளருகின்றன. ஹிந்து அல்லது முஸ்லிமினுடைய மனத்தில் ஆக்கவெழுச்சி ஒரு துறையில் பாயும்போது அவன் ஹிந்தியையும், மற்றொரு துறையில் பாயும்போது அவன் உருதுவையும் உபயோகப் படுத்துகிறான். ஹிந்திமொழியில் முஸ்லிம் செல்வாக்கு ஆழமாகப் பதிந்திருக்கிறது. அதனுடைய சொற்கள், இலக்கணம், உருவகம், யாப்பு, நடைஎல்லாவற்றிலும் அதைக் காணலாம். ஹிந்தி விஷயத்தில் எது உண்மையோ அது மராத்தி. வங்கம், இன்னும் அதிகமாகப் பஞ்சாபி, சிந்தி விஷயத்திலும் உண்மையாகும்’

‘வங்க மன்னர்களின் முயற்சிகள் மஹமதியக் கல்வியை உயர்த்துவதோடு மட்டும் நின்றுவிடவில்லை. கல்வி வளர்ச்சியின் ஒரு புதியதுறையில் அவர்கள் பேராதரவு செலுத்தினார்கள். வங்காளிகளுக்கு இது பெரிதும் உகந்தது. வங்கமொழி இலக்கிய அந்தஸ்து உயர்வடையக் காரணமாயிருந்தவர்கள் மஹமதியர்களன்றித் தாங்கள் அல்ல என்னும் உண்மை அவர்களுக்கு விபரீதமாகத் தோன்றலாம்............வங்காளத்தின் மஹமதிய அரசர்களின் கவனத்தை முதன் முதலில் இழுத்தவை இராமாயண, பாரத இதிகாசங்கள், இவைகளை வங்கத்தில் மொழி பெயர்க்கச் செய்தார்கள். வங்காள அரசர் நாஜிர்ஷா (கி. பி. 1282—1385) மஹாபாரதத்தை முதன் முதலில் வங்கத்தில் கொணரச் செய்தார். அவர் வங்கத்தின் பேராதரவாளர், சிறந்த கவிஞனை வித்தியாபதியும் அவரைத் தனது பாட்டு ஒன்றினால் அழியாப் புகழெய்துமாறு செய்திருக்கிறார். கீர்த்தி பாஸரால் இராமாயணத்தை வங்கத்தில் மொழி பெயர்க்கச் செய்தது வங்காள முஸ்லிம் மன்னனா அல்லது ஹிந்து ராஜா கான்ஸ் நாராயணரா என்பது சந்தேகமாக இருக்கின்றது. ஒருகால் நாராயணர் என்பது உண்மையாக இருப்பினும் அவரும் முஸ்லிம் மன்னர்களேற்படுத்திய முன் மாதிரியைப் பின்பற்றினாரென்பதில் ஐயமில்லை............ஹுஸேன்ஷா சக்கரவர்த்தி வங்கத்தின் பேராதரவாளர். பாகவத புராணத்தை வங்கத்தில் மொழிபெயர்க்கும்படி ஹள்தார்பாசு அவரால் அமர்த்தப்பட்டார்...............ஹுஸேன்ஷாவின் தளபதி பராகல் கானும், அவனுடைய மகன் சுட்டி கானும் மஹாபாரதத்தினுடைய மொழி பெயர்ப்பின் ஒருபகுதியோடு தங்களுடைய பெயரை இணைத்துக் கொண்டதால் அழியாப்புகழெய்தி யுள்ளார்கள்.

மொழிப் பிரச்னையை மற்றொரு கண்ணோட்டத்திலும் கவனிக்க வேண்டியிருக்கிறது. இருசமுதாயக்கொள்கை சம்பந்தப்பட்டவரை மொழிப் பிரச்னை பிரிவினைக்காரர்களுக்கு எள்ளளவும் பயன்படுவதில்லை. இடத்துக்கு இடம், இனத்துக்குஇனம் மொழி வேறுபடுகிறது. இவ்விதமாக வங்காளத்தின் ஹிந்து முஸ்லிம் இருசாராருக்கும் வங்காளி பொது மொழியாக இருக்கிறது; குஜராத்தில் குஜராத்தியும், பஞ்சாபில் பஞ்சாபியும் அப்படியே வடஇந்தியாவில் பஞ்சாபின் எல்லையிலிருந்து வங்காளத்தின் எல்லைவரையும், தெற்கே மத்திய தென்னாடுகளில் மராத்தி, தெலுங்கு மாகாணங்கள் வரையிலும் இடையிட்ட நாட்டில் ஹிந்தி, உருது அல்லது ஹிந்துஸ்தானி அல்லது வேறு எந்தப் பெயர் கொண்டாவது அழைக்கப்படுகிற மொழிபொதுவாக இருக்கிறது. இவைகள் தென்மொழிகளான தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளத்தோடு வேறுபட்டிருக்கின்றன. பொதுமக்களால் பேசப்படும் இவை, ஆங்காங்குச் சிறிது வேறுபாடுடையனவாக இருக்கின்றன. மொழி வாரியாகவும் மதவாரியாகவும் பிரிவினைசெய்வதற்கு ஒத்து வருவதற்கேற்றபடி இந்தியாவின் எந்த பாகத்திலும் மக்கட் பிரிவு கிடையாது மொழிப்பிரிவு பிரதேசவாரியாக இருக்கிறதேயொழிய இனவாரியாகவோ மதவாரியாகவோ இல்லை. வடகிழக்குப் பகுதியில் முஸல்மான்களுக்கும் முஸல்மான்களல்லாதாருக்கும் (அவர்களில்

பெரும்பாலார் முஸல்மான்களே) பொதுமொழி வங்காளியாய் இருக்குமானல், பஞ்சாப்பிலுள்ள ஹிந்துக்களுக்கும் சீக்கியருக்கும் பஞ்சாபி பொதுமோழியாக இருக்குமானல். வடமேற்குப் பகுதியில் சேர்க்கப்பட வேண்டுமென்று சொல்லப்படுகிற நாலைந்து பிரிவுகளிலுள்ள மக்களுக்குபொதுவான மொழியொன்றும் கிடையாது. ஹிந்திக்கும் வங்காளிக்கும் எவ்வளவு வேறுபாடோ அவ்வளவு வேறுபாடு ஒருபுரம் பஞ்சாபிக்கும், மறுபுரம் புஸ்து, சிந்தி, பலுஜி மொழிகளுக்கும் உண்டு. அது போல பஞ்சாபியானது ஹிந்தி, சிந்தி, காஷ்மீரி மொழிகளினின்று வேறுபட்டது. சமுதாயக் கட்டுப் பிரச்னையை மொழியடிப்படையில் வைத்துத் தீர்ப்பதுண்டானல் வங்காள முஸ்லிம்களோ அல்லது ஹிந்துக்களோ ஒன்றுசேர்ந்து போகவேண்டும். ஏனெனில் அவர்களுக்குப் பொதுமொழி யொன்றுக இருக்கிறது. அதேபோலப் பஞ்சாபியர், சிந்தியர், பட்டாணியர், பலுச்சியர் ஒரு சமுதாயத்தைச் சேர்ந்தவர்களாகார். அவர்களதுமொழிக்கும் வங்காளிக்கும் எவ்வளவு வேறுபாடுண்டோ அவ்வளவு வேறுபாடு அவரவர் மொழிகளுக்குள்ளும் இருக்கின்றன.

ஹிந்து முஸ்லிம்களுடைய சமயச் சார்பான இலக்கியங்கள் முறையே சமஸ்கிருதம், அரபி ஆகிய ஊற்றுக் கண்களிலிருந்து ஊட்டம் பெருகின்றன. தமிழ் அல்லது ஹிந்திபேசும் ஹிந்துவைப் போன்று வங்காளி பேசும் ஹிந்துவும் சமஸ்கிருதத்திலிருந்து உணர்ச்சி பெறுகிறுன். தெற்கு அல்லது கிழக்கிலுள்ள முஸல்மானைப்போல பஞ்சாபியைப் பேசும் முஸல்மானும் அதே அரபி ஊற்றுக் கண்ணிடமே செல்கிறுன். இவ்விதமாக முஸ்லிம்களும் ஹிந்துக்களும் தங்கள் தங்களுடைய மத உணர்ச்சிக்கும் இலட்சியங்களுக்கும் வெவ்வேறு துறைகளை நாடிச் செல்லவேண்டியிருப்பினும், அத்துறைகள் இத்தேசத்தின் எந்தபாகத்திலும் வழங்கப்படுகிற அல்லது பொதுவாக இருக்கிற மொழிகளாக இருக்கவில்லை. ஹிந்து முஸ்லிம்கள் தக்களிடையே பேசிவழங்குவதற்குப் பொதுமொழிகள் பெற்றிருக்கின்றனர். அம்மொழிகள் மாகாணத்துக்கு மாகாணம் வேறுபட்டிருக்கின்றன. இருப்பினும் நாட்டின் சில பாகங்களிலுள்ள பொது மொழிகள் சிறந்த விரிவான இலக்கியங்களைப் பெற்றிருக்கின்றன. அவைகளுக்கும் மதத்திற்கும் சம்பந்தம் கிடையாது.

ஹிந்தியும் உருதுவும் வெவ்வேறு மொழிகளாமாயின், ஒன்று ஹிந்துக்களையும் மற்ருென்று முஸ்லிம்களையும் சேர்ந்ததாமாயின், இந்தியாவை ஹிந்து பிராந்தியம் முஸ்லிம் பிராந்தியம் எனப்பிரிவினை செய்தபிறகு; அவ்வப் பிராந்தியங்களிலுள்ள சிறுபான்மையோருக்கு அவர்களுடைய மொழியுள்படச் சகல பாதுகாப்புரிமைகள் வழங்கப்பட்ட பிறகு— உருதுமொழி விரிவான உணர்ச்சிவேகமுள்ள எதிர்காலத்தைப் பெற்றதாக இருக்கமுடியுமா? அது எந்தமுஸ்லிம் பகுதியிலும் பொதுமொழியாக இருக்க முடியாது. வடமேற்கு, வடகிழக்குப் பிராந்தியங்களில் அதைவம்படியாகப் புகுத்தவேண்டியிருக்கும்; அல்லது வெளிநாட்டுச் சரக்கைப்போல ஆதாவோடு கண்காணித்து வளர்க்கவேண்டியிருக்கும். அல்லது மத்தியப் பிராந்தியத்தில் முஸ்லிம் அல்லாதார் பெருவாரியாக வாழும் பிரதேசத்தில்' அது சிறுபான்மையரின் மொழியாகக் காப்பாற்றப்பட வேண்டியிருக்கும்.

அவை இரண்டும் வெவ்வேறு மொழிகளாக இருப்பின் அவைகள் தமக்குரிய சுயேச்சையான வழிகளில் வளரட்டும். சுத்தமான சமஸ்கிருதம், அரபி அல்லது பாரசீகச் சொற்களைப் பெரிதும் சுமந்து நிற்காத பொதுமொழியொன்று தேசம் முழுவதற்கும் தேசிய மொழியாக உண்டாவதற்கு அவைகள் குறுக்கிடாமல் இருக்குமாக. !

இந்தியா பிரிக்கப்பட்டால்...............

பாபூ ராஜேந்திர பிரஸாத்

---

கல்லிடைக்குரிச்சயில்

## நேரு ஜெயந்தி விழா.

14…11…48 காலை இவ்வூர் காந்தி மைதானத்தில் காங்கிரஸ் கமிட்டி சார்பில் பொதுக்கூட்டம் நடந்தது. தியாகி ஸ்ரீமான் கோமதி சங்கர தீக்ஷதர் தலைமை வகித்தார். ஆசிய ஜோதி, உலகத் தலைவன் பண்டித ஜவஹர்லால் நேருவை பாராட்டி பல அன்பர்கள் பேசினுர்கள். மாலை பஞ்சாயத்து போர்டு ஆபீஸில் நடந்த கூட்டத்திற்கு E. V. K. மீரான் சாஹிப் தலைமை வகித்தார். ஸ்ரீமான்கள் T. S. வெங்கடேஸ்வரன், K. M முஹையதீன்பிச்சை, S. தங்கவேலன், A. குளத்துவையர் முதலானேர் நேருஜியின் சேவைகளை பாராட்டியும் பேசி அவர் சொல்லும் விதம் ஜனங்களை நடக்கும்படி கேட்டுக் கொண்டனர். காரியதரிசி K. S. சுப்பிரமணியம் வந்தனேபசாரத்துடன் கூட்டம் முடிந்தது.

E. V. K மீரான் சாஹிப்

Printed by V. JAYARAM at his Sri Rama Printing Works, 129, E. Kadalangudi St., Kumbakonam
Edited and Published by MOULANA ABDUL HAKEEM, 13, K. South, Kumbakonam.